உ

# அருள் ஒளி



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சிறப்புமலர்

வெளியீடு

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

120

தெல்லிப்பழை, இலங்கை

2016

# அருள் ஒளி தகவல் களஞ்சியம்

* **யாழ்ப்பாணம் அத்தியடி சிதம்பர விநாயகர் கும்பாபிஷேகம்**

  11-11-2016 காலை ஆலய மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது.

* **கொழும்பு சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம் நடத்தும் 34ஆவது மகரஜோதிப் பெருவிழா**

  16-11-2016 முதல் 05-01-2017 வரை 48 தினங்கள் மாலை 6.00 மணி முதல் 8.30 வரை விசேட பூசைவழிபாடுஇடம்பெறும்.

* **மன்னார் திருக்கேதீஸ்வரம்திருத்தலம் மீது பாடப்பட்ட அம்மை அப்பன் அருட்பாமாலை.**

  அருள்வளம் நிறைந்த திருக்கேதீஸ்வரப் பெருமான் மீது கவிஞர் வேலணையூர் சுரேஷ் யாத்த பாடல்களை இறுவெட்டாகவும், நூலாகவும் 3-12-2016 அன்று மாலை 3.00 மணிக்கு யாழ். ரியோ சரஸ்வதி மண்டலத்தில் வெளியிடப்படவுள்ளது.

* **யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நாவலர் விழா**

  யாழ். இந்துக் கல்லூரியும் சைவபரிபாலனசபையும் இணைந்து நடாத்தும் நாவலர் விழா 18-11-2016 வெள்ளிக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரிஅதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம அதிதியாக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா கலந்துகொள்ள வுள்ளார்.

* **நாவலர் நினைவுதினமும் சிவதொண்டர் கருத்தரங்கும்**

  மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையும் அகில இலங்கை இந்து மாமன்றம் இணைந்து நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவு நிகழ்வும் சிவதொண்டர் பயிற்சிக் கருத்தரங்கும் 20-11-2016 ஞாயிறு நடைபெறவுள்ளது.

உ

# அருள் ஒளி

## (மாதாந்த சஞ்சிகை)



ஆசிரியர்

கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்

கார்த்திகை மலர்

2016

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

பதிவு இல. : ISSN 2362 - 0587

ISBN 978 - 955 - 23 - 0019 - 3



e-mail : thurkaiammantemple@gmail.com

Face book: tellidurga@gmail.com


# நாவலர் பெருமானின் சிறப்பைப் போற்றும் நல்லூர் நாவலர் மாநாடு - 2016

நல்லை நகர் நாவலர் பெருமானின் வாழ்வே சைவத்தமிழர்களின் பண்பாடு இன்றுவரை எம்மண்ணில் நிலைப்பதற்குக் காரணமெனலாம். எவ்வித சுயநலமும் இன்றி தன் வாழ்வை அர்ப்பணித்த இப்புண்ணியவானை ஐந்தாம் குரவராக எம் மூதாதையர் போற்றி வழிபட்டனர். இப்பெருமகனார் உருவாக்கிய சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சென்ற ஆண்டு மார்கழி மாதம் மூன்று தினங்கள் நாவலர் மாநாடு சிறப்பாக நடைபெற்றது. நாவலர் பெருமான் வெளியிட்ட நூல்கள் மாநாட்டுக் கண்காட்சியில் காட்சிப்படுத்தியிருந்தமை சிறப்பைத் தந்தது. இவ்வாண்டு இலங்கையில் இந்து கலாசாரத் திணைக்களம் உருவாக்கப்பட்டு 30 ஆண்டுகள் பூர்த்தியடைவது குறித்து நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நவம்பர் 18, 19, 20, 21 திகதிகளில் நாவலர் மாநாடு நடைபெறுவது மிகவும் வரவேற்புக்குரிய விடயமாகும். இந்து கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு.அ. உமாமகேஸ்வரன் அவர்களின் சீரிய முயற்சியில் இம்மாநாடு விமரிசையாக நடைபெறவுள்ளது.

தருமபுரம் ஆதீனம் முனைவர் கைலை ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், பேரூர் ஆதீன இளையபட்டம் தவத்திரு மருதாசலம் அடிகளார், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த

பரமாச்சார்ய சுவாமிகள் முன்னிலையில் பல கல்விமான்கள் இம்மாநாட்டில் பங்குபற்றவுள்ளனர்.

நாவலர் பெருமானின் வரலாற்று நூல் உட்பட 4 நூல்கள் வெளியிடப்படவிருப்பது எம் தலைமுறை நாவலர் பெருமானின் பற்றி அறிவதற்கு பேருதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை. இந்துமத அலுவல்கள் அமைச்சர் கௌரவ டீ.எம். சுவாமிநாதன் அவர்கள் சேர். பொன். இராமநாதன் அவர்களின் குடும்ப பாரம்பரியத்தில் தோன்றியவர். அமைச்சரவர்கள் நாவலர் மாநாடு தொடர்பாக காட்டிய ஆர்வம் நன்றிக்குரியது. மேலும் மாநாட்டில் சிதம்பரம் நாவலர் பாடசாலை அறக்கட்டளையின் தலைவர் வைத்தியகலாநிதி அருள்மொழிச் செல்வர் சுவாமிநாதன் அவர்கள் தலைமையில் சில பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளமை மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

நான்கு தினங்கள் நல்லூரில் நாவலர் பெருமானை எம்மவர் நீள நினைந்து சிந்திக்க வாய்ப்புத் தந்த இந்து கலாசாரத் திணைக்களம் இது போன்ற நற்கைங்கரியங்களைத் தொடர அனைவரும் நல்லாதரவு வழங்குவோமாக.

**-ஆசிரியர்**


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

### தொடர்புகளுக்கு

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**



பாவலர் போற்றும் ஞான தேசிகரை
பணிந்தவரானையின் வண்ணம்
பூவலர் கொன்றை புனைந்தவர் புகழைப்
புலமிகு மறிவர் சுவட்டுண்ணக்
காவலர் வியப்ப உரைத்திடல் கேட்டுக்
கருணைசுவர் தேசிகர் இவர்க்கு
நாவலரெனும் பேர் தகுமென அளித்தார்
ஞாலத்தார் தகுந்தகும் என்ன.

– சுவாமி விபுலானந்தர்

# ஆறுமுக நாவலர் மரபில் தமிழ்நாட்டில் சைவம் வளர்ந்த வரலாறு

டாக்டர் அரங்க. இராமலிங்கம் அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர்,
சென்னை பல்கலைக்கழகம்.

## முன்னுரை

ஆறுமுகநாவலருடைய வரலாறு தனி மனிதர் ஒருவருடைய வரலாறு மட்டுமன்று. சைவசமயம், தமிழர் கல்வி, தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் முதலான துறைகளில் அவர் ஆற்றிய பணிகளின்வரலாறு எனலாம். மேற்சுட்டியதுறைகளில் அவர் செய்த தொண்டுகள் அளப்பரியன. பேச்சாற்றலுக்குப் பெயர் பெற்றவராதலால் நாவலர் என்று போற்றப்பட்டார். உரைநடையினைக் கையாண்ட திறமையினால் "வசனநடை கைவந்த வல்லாளர்" எனப் பாராட்டப்பட்டார்.பிழையற்ற பதிப்புக்களுக்குப் பெயர் பெற்றவராக விளங்கினார். மனிதாபிமானம், தேசாபிமானம், தன்மானம் ஆகிய பண்புகளைக் கொண்டிருந்தார். குறிப்பாக சைவத்தமிழ் மக்களினது வளர்ச்சியின் பொருட்டுச் சைவத்தையும் அதன் வளர்ச்சிக் கருவியாக கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையினால் இல்வாழ்க்கையைத் துறந்தார். சைவப் பயிர் தழைக்க அயராதுழைத்தார்.

## பிறப்பும் இளமைப்பருவமும்

ஈழமண்டலத்தில் யாழ்ப்பாணத்தில். நல்லூரில், கார்காத்தவேளாளர் குலத்தில் பாண்டி மழவர் குடியில்,ஞானப்பிரகாச சுவாமிகள்மரபில் கந்தப்பிள்ளை – சிவகாமியாருக்கு சித்திரபானு வருடம் மார்கழி மாதம் 5ம் நாள் (டிசம்பர் 1822) புதன்கிழமை இரவு அவிட்ட நட்சத்திரமும் பூர்வபக்க பஞ்சமித் திதியும் வச்சிர யோகமும், பாலவ கரணமுங் கூடிய சுப தினத்தில் சிம்ம லக்கினத்தில் ஆறுமுகம் பிள்ளை திருவவதாரஞ் செய்தார்.

ஐந்தாம் வயதில் வித்தியாரம்பம் செய்யப்பெற்று சிறுவர்களுக்கு கல்வி கற்பித்தலில் வல்லவரான நல்லூர் சுப்பிரமணிய ஆசிரியரிடம் கல்வி கற்கத் தொடங்கினார். அவரிடம் வாக்குண்டாம் முதலியநீதி நூல்களையும், நிகண்டு, எண்சுவடி முதலிய மற்றைய நூல்களையும் கற்றார். கற்கும் காலத்திலேயே தமிழ்க்கல்வியை நிரம்பக் கற்கவேண்டும் என்னும் ஆசை அவருள்ளத்தில் குடிகொண்டிருந்தது. பின்னர் நைடதம், பாரதம், கந்தபுராணம் முதலிய நூல்களுக்கும், மறைசை அந்தாதி முதலிய அந்தாதிகளுக்கும் பொருள் கேட்கத் தொடங்கினார். தாம் கேட்டபொருளை மனதிற் சிந்தித்து, மனனம் செய்து, தம்முடன் கற்கும் பிள்ளைகளுக்கும் அவற்றை விளக்குவார்.

இவரது ஆர்வத்தைக் கேள்வியுற்ற மூத்த தமையனார் தியாகராஜப்பிள்ளை இவரை வேலாயுதம் முதலியாரிடம் பாடம் கற்கும்படி ஒப்புவித்தார். வேலாயுத முதலியாரும் தம் பிள்ளை சம்பந்த முதலியாருடன் நாவலரையும் இணைத்து வைத்துக்கொண்டு இலக்கண இலக்கியங்களைச் சொல்லிக் கொடுத்தார்.

12ம் வயதில் பீற்றர் பார்சிவல் பாதிரியாருடைய ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்பப்பட்டு ஆங்கிலம் கற்கத் தொடங்கினார். அதே காலத்தில் தமிழை மேலுங் கற்க விரும்பி, சேனாதிராய முதலியாரிடத்திலும் சரவணமுத்துப் புலவரிடத்திலும் நன்னூற்காண்டிகை உரை, விருத்தியுரை, இரகுவம்சம், திருக்குறள், திருக்கோவையார், சீவகசிந்தாமணி சிலப்பதிகாரம் முதலிய நூல்களையும் கற்கத்தொடங்கினார். மேலும் கோயில்களில் படிக்கப்படும் கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், பெரியபுராணம், திருவாதவூரர் புராணம் முதலிய புராணங்களுக்குப் பொருள் சொல்வதையும் கேட்டுவந்தார். ஆட்சேபத்திற்கு இடமாயுள்ளவற்றைக் குறித்து வைத்திருந்து படித்து முடித்தவுடன் அவர்களிடம் விளக்கம் கேட்பார். விடைகள் தக்கவையாயின் ஒத்துக் கொள்வார். தகாதவையாயின் தாம் அப்பொருட்களை அவர்களுக்கு விளக்குவார்.

## ஆசிரியப்பணி

ஆங்கிலப்பள்ளியில் மேல்வகுப்புக்கு வந்தவுடன் பார்சிவல் பாதிரியார் இவருடைய இருமொழித்திறமையையும் கண்டு கீழ்வகுப்புக்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் படியும், மேல் வகுப்புக்களுக்கு தமிழ் கற்பிக்கும் படியும் வேண்டிக் கொண்டார். 19வயதில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளையும் நன்கு கற்றவர் என்பது யாழ்ப்பாணம் முழுதும் பரவியது. ஆங்கிலத்தைத் தமிழ்படுத்துவதிலும் தமிழை ஆங்கிலப்படுத்துவதிலும் தூய செந்தமிழ் பேசுவதிலும் எழுதுவதிலும் இவருக்கு இணையாக ஒருவரும் இல்லை என்னும் பெயர் பெற்றார். இதனை அறிந்த பார்சிவல் பாதிரியார் பைபிளைத் திருத்துவதற்காக, தமக்கு தமிழ்பண்டிதராக இவரை நியமித்துக் கொண்டார்.

## சைவசமய ஈடுபாடு

தமிழ்ப் பண்டிதராக இருந்து பைபிளைத் திருத்திக்கொண்டு வருங்காலத்தில், பரமதமாகிய (பிறமதம்) கிறிஸ்துவ மதம் பரவச் சுவமதமாகிய (தன்மதம்) சைவம் குன்றுவதைக் கண்டார். சைவ சாஸ்திரம் படித்தலின் முன்னிலும் அதிக கவனத்தைத் செலுத்தத் தொடங்கினார். சைவ சித்ததாந்த சாஸ்திரங்களாகிய சிவஞானபோதம், சிவஞான சித்தியார், திருக்களிற்றுப்படியார், திருவருட்பயன், நெஞ்சுவிடுதூது, கொடிக்கவி முதலிய நூல்களைத் தெளிவாகக் கற்றுணர்ந்தார். ஆன்மாக்கள் பொருட்டுச் சிவபெருமான் அருளிச்செய்த முதல்நூல்கள் தேவசிவாகமங்கள் என்றும், அவற்றுள் வேதம் பொதுநூலென்றும், ஆகமம் சிறப்பு நூலென்றும் அறிந்தார். சிவாகமத்தைக் கற்க சமஸ்கிருதம் (வடமொழி) வேண்டியிருந்ததால் அதனைக் கற்கமுயன்று சிறிது காலத்தில் அந்த மொழியையும் கற்றுக் கொண்டார். இத்துடன் நில்லாது, வேத சிவாகமமாதி சமஸ்கிருத சாத்திரங்களின் உண்மைப்பொருள் தமிழ்வேதமாகிய தேவார திருவாசங்களே என்றுணர்ந்து அவற்றையும் ஐயமின்றித் தெளிவாகக் கற்றுணர்ந்தார். தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மூன்று மொழிகளிலும் சைவசித்தாந்த சாத்திரங்களிலும் மிக்க பாண்டித்திய முடையவராகத் திகழ்ந்தார்.

தம்மிடம் வருபவர்களிடம் சைவ சித்தாந்த சாத்திரங்களின் சிறப்புக்களை எடுத்துக் கூறுவார். அனைவரும் இவருடைய கல்வி, ஒழுக்கம், ஆகியவற்றைக் கண்டு அன்புவைக்கத் தலைப்பட்டனர்.

கருவிநூல்களையும் சமய நூல்களையும் சிலருக்குக் கற்பித்தால் அவர்களால் உலகத்திற்குப் பயன்கிடைக்கும் என்று கருதி, காலையிலும் இரவிலும் இலவச மாகக்கற்பித்து வந்தார். சதாசிவப்பிள்ளை, சுவாமிநாதையர், நடராசையர், விசுவ நாதையர், ஆறுமுகப்பிள்ளை, கந்த சுவாமிப்பிளளை , ஆறுமுகச்செட்டியார் முதலானவர்கள் இவரிடம் கல்வி க்ற தமிழறிஞர்கள் ஆவர்.

## தமிழகவருகை

பைபிளின் திருத்திய பதிப்பினை அச்சிடுவதற்காக முதன்முதலாகத் தமிழ கத்துக்கு வந்தார். சென்னையிலுள்ள கிறித்துவ அமைப்பினர் (Missionaries) யாழ்பாணத்து தமிழ்ப்பண்டிதரால் திருத் தப்பட்ட பைபிள் இங்குள்ள பண்டிதர் முன்னிலையில் வாசிக்கப்பட்டு அவர்கள் பிழை இல்லை என்றும் வசனநடை நன்றாய் இருக்கின்றதென்றும் சொன்னால் தான் அச்சுப்பதிப்பிக்கலாம் என்றும் சொல்லிவிட்டனர். இதனைக் கேட்ட பார்சிவல் மனம் தளர்ந்தார். பண்டிதர் அதற்கு " நாங்கள் திருத்திய பைபிளில் பிழை இல்லை, வசனநடையும் நன்றாய் இருக்கின்றதென்றும், கவலைவேண்டாம். யார்வேண்டுமானாலும் வாசித்துப் பார்க்கட்டும் என்று கூறினார். அப்பொழுது சென்னையில் சிறந்த வித்துவானாயிருந்த மகாலிங்கையர் பைபிளை முற்றும் வாசித்து பிழையில்லைஎன்றும், வசன நடை நன்றாய் இருக்கிறதென்றும் அச்சிடு வதற்குத் தகுதி என்றும் சொல்லி, யாழ்ப் பாணத்து தமிழையும் நன்கு பாராட்டி வியந்தார். அதன் பின்னர் நாவலர் அச்சிட்டுக் கொண்டு விரைவில் யாழ்ப்பாணம் திரும்பினார்.

## சைவ சமயப் பிரசாரம் முதற் பிரசங்கம்

அனேகர் சைவசமயத்தினின்றுங் கிறித்துவ மதத்திற்கு மாறுவதற்குக் காரணம் சைவசமயத்துண்மையை அறியா மையினாலேயே என்றறிந்தார். அதனால் சைவப்பிரசங்கஞ் செய்யமுயன்று, வண்ணார் பண்ணையில் மகௌதாரிய மாகாபிரபு வாகிய வைத்தியலிங்கச் செட்டியாராற் கட்டுவிக்கப்பட்ட வைத்தீசுவரன் கோவில் வசந்த மண்டபத்தில் பிலீபங்க வருடம் மார்கழி மாதம் 18ஆம் நாள் (31.டிசம்பர்.1847) சுக்கிரவாரமும் சுவாதி நட்சத்திரமும் கூடிய சுப தினத்தில் சைவமென்னும் செஞ்சாலி வளரும் பொருட்டுப் பிரசங்கமென்னும் மழையைப் பொழிந்தார். வெகு தூரத்திலி லிருந்தும் மக்கள் திரளாக வந்து இவர் முதற்பிரங்கத்தைக் கேட்டு இன்புற்றனர். கடவுள் வாழ்த்து, உருட்திராஷதாரணம், சிவபக்தி, வேதாகமங்கள், திருவிழா, சிவலிங்கோபாசனை, யாக்கைநிலை யாமை, சிவதீஷை, மகளீரொழுக்கம், இகபரசி லாக்கியங்கள், கல்விகற்பித்தல், கடவுளொருவன் உண்டெனல், பசுக்காத்தல், அறிவொழுக்கங்களிற் சிறந்தோரைத் தழுவி நடத்தல், பிரபஞ்சமாயை, பேதமை, கொல்லாமை, நீதி சிகைஷ, வியபிசாரம், கள்ளுண்ணல், சிவதிரவியங்கவருதல் முதலியவை பற்றிப்பிரசங்கம் செய்தார்.

## பிரசங்கத்தின் பயன்

மாமிச உணவுசாப்பிட்ட அநேனர் அதனை விட்டனர் மதுபானம் உண்டவர் அநேனர் அதனை விட்டனர். ஆலய தரிசனம் மேற்கொண்டனர். அநாதிமூத்த சித்துரு வாகிய சிவனொருவரே சகல ஆன்மாக்க ளிற்கும் மேலாகிய கடவுளென்றும், அவரை வழிபடுதலால் தாங்கள் சித்தாந்த சைவ

ரென்றுந் தெளிந்து கொண்டார்கள். பிறன் மனைவிழைதல், வரைபின்மகளிர் விழைதல், முதலியவற்றைக் கொண்டிருந்த அநேகர் அவை பாவமென்று கண்டு வெறுத்துவிட்டார்கள் மரணத்தைக் குறித்து ஒருபோதுஞ் சிந்தியாதிருந்த பலர் சரீரம் அநித்திய மென்றும், இருவினைக்கீடாகிய சுகதுக்கங்களை அனுபவித்தல் நிச்ச மென்றும் அது நீங்கும் அவதி தமக்குத் தெரியாதென்றும் தெரிந்து கொண்டார்கள். சிவபெருமானிடத்தே அதிக அன்பு வைத்தலே தகுதி என்று கண்டு அன்புவைத்தார்கள். கல்வியின் மேம்பட்டசெல்வம் பிறதொன்று மில்லை யெனக்கண்டு கல்விகற்கத் தொடங்கினார்கள். பசுக்களை இரக்கமின்றி அடித்துத் துன்புறுத்தியவர்கள் அதற்கு வேண்டியவற்றைக் கொடுத்துபசரிக்கத் தொடங்கினார்கள்.

## சைவவித்தியாசாலையை நிறுவுதல்

சைவ சமயப் பிள்ளைகளுக்குக் கருவி நூல்களோடு சமயநூல்களும் படிப்பிக்கப் பட்டால், அவர்கள் தம்மதத்தில் நிலைத்து நிற்றல் மாத்திரமன்றி, பிற மதங்களையும் கண்டித்தற்குச் சக்தியுடையராயும் வருவார்கள் என்பதை நன்றாக அறிந்து கொண்டார். அதனால் ஒரு வித்தியா சாலையை நிறுவ எண்ணி கீலன வருடம் ஆவணி மாதம் 5ஆம் நாள் (1848) சுக்கிரவாரமும் கிருஸ்ணபட்ச சதுர்த்தியும் ரேவதி நட்சத்திரமும் சூலநாம யோகமும் பாலவ கரணமும் கூடிய சுபதினத்தில் விருச்சிய லக்கினத்தில் வண்ணார் பண்ணையில் நிறுவினார்.

## பதிப்பு முயற்சி பற்றிய சிந்தனையால் மீண்டும் தமிழகம் வருகை

தமது வித்தியர்சாலையில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு கருவிநூலுணர்ச்சியும் சமயநூலுணர்ச்சியும் ஊட்டத் தக்க புத்தகங்கள் யாழ்ப்பாணத்திலில்லாமையாலும், இருக்கும் நூல்களும் பிழை பொதிந்தவைகளாக இருந்ததாலும் தான் ஒரு அச்சியந்திரம் வாங்கும் பொருட்டு 1849இல் பயணம் புறப்பட்டார். வேதாரணியம் போய், அங்கிருந்து மாயூரம் மார்க்கமாய் திருவாவடுதுறை மடத்தை யடைந்தார். இவருடைய சொற்பொழிவைக் கேட்ட அங்கிருந்த வித்துவான்கள் "நாவலர்" என்ற சிறப்புப் பெயரைச் சூட்டினர். அன்றிலிருந்து சிறப்புப்பெயரை இயற்பெயரின் பின் வைத்து **ஆறுமுக நாவலர்** என அழைப்பாராயினர். பின்னர் அங்கிருந்து சென்னை வந்து சேர்ந்தார். இங்கு சூடாமணி நிகண்டுரையும், சௌந்தரியலகரியையும் அச்சுப் பதிப்பித்துக் கொண்டு ஓர் அச்சியந்திரத்துடன் யாழ்ப்பாணம் சென்றடைந்தார்.

## பதிப்புகள்

தான் கொண்டுவந்த அச்சியத்திரத் திரத்திற்கு **வித்தியாநுபாலன யந்திர சாலை** எனப்பெயர் கொடுத்து நிறுவினார். சைவசமயிகளுக்கு அவசியம் வேண்டுவனவாகிய நூல்களைப் புதிதாகச் செய்தும், பரிசோதித்தும் அச்சுப் பதிப்பித்தார். ஆங்கில மொழியிலிருக்கும் பாலபாடம் போன்று தமிழ்மொழியிலும் பாலபாடங்கள் செய்தால் அவை சைவ சமயத்தினருக்குப் பயனாக இருக்குமெனக் கருதி, பல நீதிசாரங்களையும் சைவசமயச் சாரங்களையும் திரட்டி வசனநடையில் எழுதி முதற்பால பாடத்தின் இறுதியிலே ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய நீதி நூல்களையும், 2ம் பாலபாடத்தில் அவற்றிக்கு உரையுமெழுதி சேர்த்துப் பதிப்பித்தார். "அஃகஞ் சுருக்கேல்" (தானிய

அளவை அதிகலாபத்திற்காக குறைக்காதே) போன்றவற்றிற்கு பொருள் மிக எளிதில் விளங்கச் செய்தார். அடுத்து கொலை மறுத்தல் முதலியவற்றையும், பவணந்தி முனிவர் இயற்றி நன்நூலுக்குச் சங்கர நமச்சிவாயப்புலவரால் செய்யப்பெற்ற விருத்தியுரையையும் பதிப்பித்தார். திருச் செந்தினிரோட்டக யமகவந்தாதிக்கும், திருமுருகாற்றுப்படைக்கும் உரைஎழுதியும் பதிப்பித்தார். பக்தி நூலாகிய பெரிய புராணத்தை வசனநடையில் எழுதிப்பதிப் பித்தார். சுன்னாகம் முத்துக்குமார கவிராயர் பாடியிருந்த ஞானக்கும்மி என்னும் நூலைப் பரிசோதித்து, நல்லூர் சி.விநாயகமூர்த்திச் செட்டியார் பெயரில் வெளியிட்டார்.

கிறித்துவர்கள் சுப்பிரமணியப் பெரு மானை இழிவாகப்பேசிவந்ததையும் அத னால் சைவசமயிகள் மயங்கிக் கிடந்த தையும் கேள்வியுற்ற நாவலர் அவர்களு டைய ஐயம் தீரும்படியும் சுப்ரமணியக் கடவுளின் ஆறுமுகத்திற்கும் பன்னிரெண்டு திருக்கரங்களிற்கும் விளக்கம் கூறி, ஒரு நூலாக எழுதி **"சுப்பிரபோதம்"** என்ற பெயரில் வெளியிட்டார். பாதிரிமார்கள் சைவசமயத்தைப் தூஷணம் செய்வதைக் கண்டு, அத்தூஷணங்களை நிராகரித்துச் **"சைவ தூஷணபரிகாரம்"** எனும் நூலை எழுதி வெளியிட்டார்.

## மீண்டும் தமிழகம் வருகை

1858ம் ஆண்டு மீண்டும் சென்னைவரப் பயணப்பட்டார். வேதாரணியம் போய் சுவாமிதரிசனம் செய்துவிட்டு, அதைவிட்டு நீங்கி பலதலங்களை வணங்கித் திரு வாவடுதுறை ஆதீனத்தை அடைந்தார். அங்கு புராணங்களுக்குப் பொருள் சொல்லிக் கொண்டு சில நாட்கள் இருந்தார். அங்கிருந்து புறப்பட்டு தருமபுர ஆதீனத்தை யடைந்து, அங்கிருந்த நாட்களில் சைவ சமயச் சொற்பொழிவுகள் ஆற்றினார். பின்னர் சீர்காழி, சிதம்பரம் ஆகிய தலங்களை வணங்கிக்கொண்டு சென்னை வந்தடைந்தார்.

சென்னையிலிருந்தபோது திருவாசகம், திருக்கோவையார் ஆகிய இரண்டையும் பரிசோதித்து வெளியிட்டார். மேலும் பலநூல்களை அச்சிட்டு வெளியிட்டார். இராமநாதபுரத்து ஜமீன்தார் பொன்னுச்சாமி தேவரின் வேண்டுகோளுக்கு இணங்கிச் திருக்கோவையார் நச்சினார்க்கினியர் உரையையும், திருக்குறள் பரமேலழகர் உரையையும், தருக்கசங்கரகம் அன்னம பட்டயத்தையும் பரிசோதித்துப் பதிப்பித்தார். திருமயிலையில் இருந்த திருவண்ணா மலை ஆதீனத்திற்குச் சென்று ஆறுமுக தேசிகர் திருக்கரங்களால் உருத்திரசஞ்சியம் கட்டப்பெற்றார்.

பிறகு சென்னையை விட்டு யாழ்ப் பாணம் செல்ல விரும்பி, பல தலங்களை வணங்கிக் கொண்டு சிதம்பரம் வந்து தரிசனஞ் செய்து, திருவாவடுதுறையை அடைந்தார். பிறகு வழியிலுள்ள பல தலங்களையும் வணங்கிக் கொண்டு திருநாகைக்காரோணம் வந்தடைந்தார். சில நாள்கள் அங்கு சைவசமயச் சொற் பொழிவாற்றிவிட்டு 1862இல் யாழ்ப் பாணம் சென்றடைந்தார்.

1868ஆம் ஆண்டு மீண்டும் சென் னைக்குப் பயணமானார். இராமேசுவரம் சென்று சேதுஸ்தானமும் சுவாமி தரி சனமும் செய்து கொண்டு மதுரைக்குப் போக நினைந்து இராமநாதபுரம் வந்து

சேர்ந்தார். அங்குள்ள திருவாவடுதுறை மடத்தில் தங்கினார். அவர் வந்திருந்ததை அறிந்த பொன்னுசாமித்தேவர் அவரை அவருடைய சீட்டுக் கவிதையைப் படித்து விட்டுத் தேவரைப் பார்க்க ஒத்துக் கொண்டு தமது பரிசனங்களுடன் தேவர் அரண் மனைக்குச் சென்றார். தேவர் எதிர்கொண்ட ழைத்து, ஆசனத்திருத்தி, கல்வி பற்றிய செய்திகள் பலவற்றைப் பேசிய பின்பு, பிரசங்கம் செய்யுமாறு வேண்டிக் கொண் டார். அங்கு இருந்த வைணவ சாஸ்திரிகள் முன்னிலையிற் 'சைவ சமயமே சமயம்' என்னும் பொருளில் 'சமயாதீதப் பழம் பொருளை' என்னும் தாயுமான சுவாமி பாடற் பொருளையே பீடிகையாக எடுத்துக் கொண்டு, சிவன் ஒருவனே கடவுள்; சைவ சமயமே மெய்ச்சமயம் என்று பிரசங்கித் தார். தேவரும் பிறரும் மகிழ்ந்து அவருக்குச் சிறப்புச் செய்தனர். அங்கிருந்து திருவுத்தர கோசமங்கைக்குச் சென்று வழிபாடியற்றிய பின்னர் மதுரை சென்றடைந்தார்.

மதுரையில் சொக்கலிங்க மூர்த்தி யினுடைய பெருமையையும், சைவ சித் தாந்தத்தினுடைய உயர்வையும் விரித் தோதினார். அங்கிருக்கும்பொழுது திருப் பூவணம், திரிவேடகம் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு, திருப்பரங்குன்றம் சென்று சுப்பிரமணியப் பெருமானை வணங்கிவிட்டு, குன்றக்குடிக்கு வந்தார். அங்குள்ள திருவண்ணாமலை ஆதீ னத்தில் சைவசித்தாந்தத்தினது உயர்வை யும் அதன்வழி ஒழுகுவோர் எய்தும் பயனையுங் குறித்துப் பிரசங்கம் செய்தார். பின்னர் அங்கிருந்து திருப்பெருந்துறைக்குச் சென்று திருவாவடுதுறை ஆதீன மடத்தில் தங்கி, சுவாமி தரிசனஞ் செய்து வந்தார். அவ்விடத்தை விட்டு நீங்கித் தொண்டை மான் ஆட்சி செய்யும் புதுக்கோட்டைக்குப் போனார். பின்னர் நெடுங்குடி சென்று சுவாமிதரிசனஞ் செய்து, பிரசங்கம் செய்துவிட்டு மீண்டும் புதுக்கோட்டை வந்தார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு திரிச்சிராப்பள்ளி, திருவானைக்கா, தஞ்சாவூர் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு கும்பகோணம் வந்தார். கும்ப கோணத்தில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கும் பிறருக்கும் சித் தாந்த நூல்களிலும் இலக்கண இலக்கியங் களிலும் உள்ள ஐயங்களைத் தீர்த்து வைத்தார்.

அங்கிருந்து புள்ளிருக்குவேளூர் சென்று சுவாமியைத் தரிசித்துவிட்டு திருஞானசம்பந்தர் திருவவதாரஞ் செய் தருளிய சீர்காழியின் எல்லையை அடைந்த மாத்திரத்தே கைகளைச் சிரசின் மீது குவித்து தோணியப்பரை பன்முறை வணங்கினார். பின்னர் சிதம்பரம் புறப் பட்டார். அங்கே 1864இல் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசலை எனப் பெயர் கொண்ட பள்ளிக்கூடத்தை நிறுவினார். சிதம்பரத்திலிருந்த பூசகர்களுக்குச் சிவா கமத்தின் சிறப்புக்களை எடுத்தோதினார்.

சிதம்பரம் இராமலிங்கம்பிள்ளை என அழைக்கப்பெற்ற வடலூர் வள்ளலார் பாடிய பாடற்கருத்துக்களுக்கு எதிராக நாவலர் பிரசங்கம் செய்தார். வள்ளலாரைப் பற்றிப் போற்றியெழுந்த பிரசுரங்களுக்கு எதிராக நாவலர் 'போலியருட்பா – மருட்பா மறுப்பு' என்னும் கண்டன நூலை 1869இல் வெளி யிட்டார். அருட்பிரகாசவள்ளலாரின் பாட லுக்குத் திருவருட்பா என்று பெயர் இட்டிருப்பதை நாவலர் மறுத்துப் பேசுவதை தமிழ்நாட்டில் பலர் விரும்பவில்லை.

நாவலர் தொடர்ந்த வழக்கால் பலருக்கு வருத்தம் ஏற்பட்டது. வழக்கு பின்னர் தள்ளுபடியானது.

**முடிவுரை :**

சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தமிழகம் முழுவதும் பரப்பிய நாவலர் 1879ஆம் வருடம் தமது ஐம்பந்தாறாம் வயசும் 11ஆம் மாசமுமாகிய பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் 21ஆம் தேதி ஸ்ரீ நடராசப் பெருமானுடைய குஞ்சித பாத நிழலையடைந்தார். நாவலர் அவர்கள் பல்வேறு சவை நூல்களைப் பதிப்பித்தவர்; சிவாகமங்களின் பெருமையை எடுத்துரைத்தவர்; தமிழகத்திலுள்ள சிவாலயங்களின் பெருமையை எடுத்துரைத்தவர்; தமிழகத்திலுள்ள சிவாலயங்களுக்குச் சென்று சொற்பொழிவாற்றியவர்; தமிழக வித்துவான்களாலும் சைவ சமயிகளாலும் போற்றப்பட்டவர்.

தமிழ்நாட்டில் தங்கியிருந்து தமிழுக்கும் சைவத்திற்கும் பெருந்தொண்டாற்றியவர் ஆறுமுகநாவலர். ஆனால் தமிழறிஞர்கள் நாவலர் பெருமானின் முழுமையான பங்களிப்பினைத் தமிழ் மக்களுக்கு உணர்த்தத் தவறிவிட்டனர். தமிழகத்தில் ஆறுமுகநாவலர் அவர்கள் செய்த தமிழ்த் தொண்டும் சைவத்தொண்டும் என்றும் நினைந்து போற்றத்தக்கதாகும். தமிழ் நாட்டில் சைவமரபை நீரூற்றி வளர்த்த பெருமைக்குரியவர்களில் நாவலர் தலையாயவர் எனில் மிகையாகாது.

## ஆறுமுகநாவலர் அருளிய குட்டிக் கதை

சம்பத்து உடையவனாகிய ஒரு வர்த்தகன் இருந்தான். அவன் தன் பல்லக்குச் சுமக்கிற ஆட்களை அழைத்து, "பசுமாட்டுக்கு நாள்தோறும் புல்லுவெட்டிக் கொண்டுவந்து போடுங்கள்" என்றான். அதற்கு அவர்கள் "நாங்கள் பல்லக்கு மாத்திரம் சுமப்போம். வேறு வேலை செய்யமாட்டோம்" என்றார்கள்.

இப்படி இருக்கும்பொழுது ஒருநாள் பசுவின் கன்று வெளியில் ஓடிப்போயிற்று. அப்பொழுது வர்த்தகன் அந்தச் சிவிகையாட்களைப் பார்த்து, "கன்றைத் தேடிப்பிடித்துக்கொண்டு வாருங்கள்" என்று சொல்ல, அவர்கள் "நாங்கள் பல்லக்குச் சுமக்கிறவர்களோ, மாடு மேய்க்கிறவர்களோ" என்றார்கள். அப்பொழுது வர்த்தகன் அவர்களுக்குப் புத்தி வரும்படி செய்யவேண்டுமென்று யோசித்து, மத்தியான வேளையிலே பல்லக்குக் கொண்டு வரச் சொல்லி, அதிலே தான் ஏறி, கன்றைத் தேடும்படி நெருஞ்சிமுள் இருக்கிற காட்டுப் பக்கமாய்ப் போகச் சொன்னான். அப்படியே போய்த் திரிந்து வருந்துகையில், வர்த்தகனிடத்தில் முறையிட்டார்கள். அதற்கு அவன் "பல்லக்குச் சுமக்கிறது உங்கள் கடமை, கன்றைத் தேடுகிறது என் கடமை" என்று சொல்லி, அவர்கள் பல்லக்கை நிறுத்தாமற் சுமக்கும் படி செய்தான். அன்று முதல் அவர்கள் நல்ல புத்தி அடைந்து, எசமானன் ஏவும் எந்தக் காரியத்தையும் செய்வது கடமை என்று ஒப்புக் கொண்டார்கள்.

# நாவலர் தாள் இறைஞ்சுதும்

அமரர் பண்டிதர் கா.பொ.இரத்தினம் அவர்கள்

பூமணக்கும் பொழில்மணக்கும்
புனிதநல்லூர் தான்மணக்கப்
பாமணக்க உரைமணக்கப் பகர்சைவ நெறிமணக்கத்
தேமணக்குந் தமிழணங்கு செய்தபெருந் தவப்பயனால்
நாமணக்க அவதரித்த நாவலர்தாள் இறைஞ்சுதுமே.

தொல்லறங்கள் சிறந்தோங்கத்
தூயதொண்டு செய்யவெண்ணி
இல்லறத்தை விரும்பாமல் இடர்மிக்க துறவென்னும்
வல்லறத்தை மேற்கொண்டு வாழ்வினையேஉவந்தளித்துப்
பல்லறங்கள் பொலிவித்த பண்பினனைப் போற்றுதுமே.

பன்னெறிகள் வளர்கின்ற பாருலகில் தமிழர்தம்
தொன்னெறியாய் மிளிர்ந்தசைவம்
தோற்றமிழந்து இங்கு வந்த
பின்னெறிகள் சிலவற்றாற் பீடழிய மீண்டுமதை
முன்னெறியாய் நிலைநிறுத்த முயன்றோனை வாழ்த்துதுமே.

தமிழ்க்கடலின் நிலைகண்டு தன்னொப்பா ரின்றியுயர்ந்து
அமிழ்தனைய உரைநடையை அருமையுற வளப்படுத்தி
இமிழ்கடலும் கறையானும் ஏக்கமுறத் தமிழ்நூல்பொற்
சிமிழ்நிகர்க்கப் பதிப்பித்த திறலோனைப் பரவுதுமே.

பூச்சிந்தும் நறுந்தேன்போற் பொருளோடுசொல்லணிசேர்
பாச்சிந்தும் புலவர்கள் பாடுஞ்சீர் படைத்தோங்கிக்
காஞ்சிந்தும் மலர்போலக் கற்றோரும் மற்றோரும்
நாச்சிந்தும் இசைகொண்ட நாவலரை வணங்குதுமே.

# நற்றமிழ் வளர்த்த நாவலர் பெருமான்

**கவிநாயகர் சைவதுரந்தரர் வி.கந்தவனம்**

யாழ்பாணத்து நல்லைநகர் தந்த ஆறுமுகநாவலர் அவர்கள் தமிழுலகுக்கு ஆற்றிய சேவைகள் சைவப்பணி, தமிழ்ப்பணி , கல்விப்பணி, பொதுப்பணி அல்லது சமூகப்பணி என பன்முகப்பட்டவை. அவற்றுள் அவரது தமிழ்ப்பணி பற்றி இங்கு சிறிது நோக்குவாம். நாவலர் அவர்கள் தமிழ்மொழிக்கு ஆற்றிய தொண்டினைச் சரியாக விளங்கிக் கொள்வதற்கு அவர் வாழ்ந்த காலம் பற்றிய விளக்கம் அவசியமாகும். அவர் வாழ்ந்த காலம் (1822 – 1879) ஆங்கிலேயர் இலங்கையில் ஆதிக்கம் செலுத்திய காலம் ஆங்கிலம் தெரியாதவன் கல்வியறிவு இல்லாதவன் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த காலம். அதனால் ஆங்கில மோகத்தில் தமிழர்கள் அள்ளுண்டிருந்த காலம்.

அது மட்டுமன்றிக் கிறிஸ்தவ மிஷனறிகள் தங்கள் மதத்துக்கு மாற்றிக்கொண்டு இருந்தனர். மதமாற்றம் ஆங்கிலேயர் ஆட்சிக்கு (1796 –1948) முன்பிருந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. போத்துக்கேயர் (1505 – 1656) கத்தோலிக்க மதத்தையும் ஒல்லாந்தர் (1656 – 1796) புரட்டஸ்தாந்து மதத்தையும் பரப்பினர். அவ்விதம் பரப்புகையில் இந்து சமயம் ஒரு மிலேச்சச் சமயம் என்றும் மூட நம்பிக்கைகள் மிகுந்த சமயம் என்றும் தூற்றித் தூற்றி மதத்துவேச நடவடிக்கைகளில் கிறிஸ்தவர்கள் ஈடுபட்டிருந்தனர் இது ஆங்கிலேயர் காலத்திலும் தொடர்ந்தது.

இத்தகைய அந்நியச் சூழலிருந்து தமிழரையும் தமிழ்மொழியையும் சைவத்தையும் மீட்பதற்கென்றே, காப்பதற்கென்றே அவதரித்தவர் நாவலர் பெருமான். அவர் தமிழிலக்கிய இலக்கண நூல்களையும் சைவ நூல்களையும் ஐயம் திரிபறக்கற்றவர். அத்துடன் சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் நிரம்பிய புலமைபெற்று ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஆசிரியராக, அறிஞராகத் திகழ்ந்தவர். அவரது தமிழ்ப்புலமையை,

**"அகத்தியந்தொல் காப்பியமுன் னாயபல விலக்கணமும்**
**சகத்தியபல் லிலக்கியமும் சாற்றுபர மதநூலும்**
**மகத்துவமெய்ப் பொருள்நூலும் மதியமையப் பயின்றுணர்ந்து**
**சகத்தியலும் அனுபூதித் தோன்றலாய் அமர்பெயரோன்"**

என்று அவர்காலத்து வாழ்ந்த பேரறிஞர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பாராட்டியுள்ளமை கவனிக்கத்தக்கது.

நாவலர் அவர்களுக்கு சகல பணிகளுக்கும் அத்திவாரமாக அமைந்தது அவரது சைவத் தொண்டு. கிறிஸ்தவர்கள் மானிப்பாயில் அச்சுக்கூடம் அமைத்து நூல்கள் மூலமாகவும் சிறுபிரசுரங்கள் மூலமாகவும் தமது சமயப்பிரசாரத்தை விரிவுபடுத்திக் கொண்டிருந்தனர். அதனைக் கண்ணுற்ற நாவலர் தாமும் அச்சுக்கூடமொன்றை அமைக்க விழைந்தார்.

1849ம் ஆண்டு நல்லூரில் வித்தியாநுபாலன அச்சியந்திரந்திரசாலை என்னும் அச்சகத்தை நிறுவி நூல்கனை வெளியிடலானார். நாவலர் அவர்களது சமய, தமிழ்ப்பணிகள் இவ் அச்சுக்கூட அமைப்புடன் தீவிரமடையலாயின. 1851ல் இவ் அச்சுக்கூடம் வண்ணார் பண்ணைக்கு மாற்றப்பட்டது. இலங்கையில் காகிதாதிகளின் விலை அதிகமாக இருந்ததால் பலநூல்களை சென்னையிலுள்ள அச்சுக்கூடங்களில் பதிப்பித்தார். பின்னர் 1869ம் ஆண்டளவில் சென்னையிலுள்ள தங்கசாலைத் தெருவிலே தாமாக ஒரு அச்சகத்தையும் நிறுவினார். அதற்கும் வித்தியானுபாலன யந்திரசாலை என்றே பெயரிட்டார்.

## பாடநூல்கள்

ஆரம்பத்தில் அவரால் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பெற்ற சைவவித்தியாசாலை மாணவர்களுக்கு வேண்டிய நூல்கள் பலவற்றை தாமே எழுதி வெளியிட்டார். " பாலபாடம், என்னும் பாடநூல் தொடரொன்றை முதற்புத்தகம், இரண்டாம் புத்தகம், மூன்றாம் புத்தகம், நான்காம் புத்தகம் என படிமுறையாக எழுதினார். வகுப்புக்களின் தரங்களுக்குத் தக விடயங்களைத் தெரிவுசெய்து அவற்றை தெளிவான தமிழ்நடையில் விளக்க வல்லவராக நாவலர் பெருமான் விளங்கினார். வளர்ந்தோர் கல்விக்கே உரியதாக அக்காலத்தில் கருதப்பட்ட தமிழிலக்கணத்தைச் சிறார்களும் கற்றுத் தெளியும் வகையில் எளிமைப்படுத்தி இலக்கண வினா விடை, இலக்கணச்சுருக்கம் போன்றவற்றை எழுதினார். தமிழுக்கு மட்டுமன்றி சைவசமயம், பொது அறிவு, பூமி சாஸ்திரம், தருக்கம், போன்றவற்றுக்கும் பாடநூல்களை எழுதி ஆங்கிலக்கல்வி மேலோங்கியிருந்த காலத்தில் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டார்.

## பதிப்பாசிரியர்

தமிழ்நூல்கள் யாவும் ஓலைச்சுவடிகளில் இருந்தன. பல ஏடுகள் தேடுவாரற்றுச் செல்லரித்துச் சிதைவுற்று கிடந்தன. அவற்றைப் பாதுகாக்க வேண்டிய தேவையை உணர்ந்து அதனை நிவர்த்திசெய்யும் பணியிலும் நாவலர் ஈடுபட்டார். அச்சுக்கலை வளர்ச்சியை பயன்படுத்தி தமிழ் நூல்களுக்கு புதியவடிவங்கள் கொடுக்கமுயன்றார். அந்த முயற்சியில் ஏடுகளைத்தேடிப் பெறுதல், அவற்றை ஆராய்தல், பாடபேதங்களை உணர்தல், அவற்றில் பொருத்தமானவற்றைத் தெரிதல் போன்ற சிரமமான வேலைகளை அவர் எதிர்கொள்ளவேண்டியிருந்தது. பழந்தமிழ்நூல்களில் அவருக்கு இருந்த பயிற்சியும் அஃகி அகன்ற அறிவும் அவற்றை எல்லாம் எளிதாக்கினார்.

சௌந்தரிய லகரி மூலமும் "சைவ எல்லப்ப நாவலர்" உரையும், கந்தபுராணம், சேது புராணம்,தொல்காப்பியம்,சேனாவரையருரை,உவமான சங்கிரகமும் இரத்தினச்சுருக்கமும், தொல்காப்பிய விருத்தி, சிதம்பரமும்மணிக்கோவை, அருணகிரிநாதர் திருவகுப்பு, விநாயக கவசம் ஆகியன, கந்தபுராணம், 11ம் திருமுறை, நாவலர் நான்மணி மாலை ஆகியன பட்டினத்துப்பிள்ளையார். திருப்பாடல் திரட்டு, திருக்கோவையாருரை, திருக்குறளுரை, பாரதம் முதலிய பலநூல்களை நாவலர் பரிசோதித்துப் பதிப்பித்தார்.

## உரையாசிரியர்

செய்யுள்வடிவில் அல்லது சூத்திர வடிலேயே பழந்தமிழ் நூல்கள் ஆக்கப்பட்டிருந்தன. அதுவே தமிழர் மரபாகவும் இருந்தது. அவற்றில் பலவற்றிற்கு ஏற்கனவே உரைகள் எழுதப்பட்டிருந்தனவாயினும் அவற்றைத் தெளிவாக்கியும் உரை எழுதப்படாதிருந்த பலநூல்களுக்கு உரைகளை எழுதியும் நாவலர் தமிழ்ப்பணி புரிந்தார்.

1867ல் சென்னைக்கலாநிதி அச்சுக்கூடத்தில் சூடாமணி நிகண்டு 10 தொகுதிகள் நாவலர் அவர்களால் உரையுடன் பதிக்கப்பட்டுள்ளன. நன்னூல், நைடதம், திருச்செந்தினிரோட்டக யமக வந்தாதி, திருமுருகாற்றுப்படை, கோயிற்புராணம், சைவசமய நெறி, மருதூர்யமகவந்தாதி போன்றவற்றிற்கும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, நன்னெறி முதலிய நீதிநூல்களுக்கும் நாவலர் உரை எழுதியுள்ளார். உரையாசிரியர் பெயரைக்குறிப்பிடாது அவர் பதிப்பித்த நூல்கள் சிலவற்றின் உரைகளை அவரே எழுதியிருத்தல் கூடுமென்றும் கருதப்படுகின்றது.

## வசன ஆசிரியர்

தமிழில் வசனநடையை வளர்த்து வளப்படுத்திய பெருமை நாவலருக்குரியது. பாட்டு நடைபயின்ற தமிழ் அன்னைக்கு வசனநடை பயிற்றுவித்தவர் இவர். இவரது விதம் விதமான வசன நடைகளை பாடப்புத்தகங்களிலும் செய்யுள் நூல்களுக்கு எழுதிய உரைகளிலும் அவர் அவ்வப்போது வெளியிட்ட பலவிதமான அறிக்கைகளிலும் காணலாம். எனினும் அவர் எழுதி வெளியிட்ட பெரியபுராணவசனம், பெரியபுராண சூசனம் , சிதம்பரமான்மியம், திருவிளையாடற்புராண வசனம் போன்ற வசன நூல்களிலேயே அவரது வசனநடை வல்லமை முழுமையாகப் பிரகாசிக்கின்றது. தெளிவும் திருத்தமும் இனிமையும் எளிமையும் உடைய இவரது வசன நூல்களைப்படித்து இனபுற்ற ஆன்றோர் " வசன நடை கைவந்த வல்லாளர்"" என்றும் இவரைப் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

இவ்விதம் நாவலர் அவர்கள் தாமாக ஆக்கியும் ஏட்டில் இருந்தவற்றை பரிசோதித்து பதிபபித்தவையும் உரை எழுதியவையும் செய்யுள் நூல்களை வசன வடிவில் தந்தவையுமாக மொத்தம் 70 நூல்களை வெளியிட்டுள்ளார்.

நாலவர் பதிப்புகள் அன்று விரும்பி வரவேற்கப்பட்டன. பாடநூல்கள் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டன. வாசிக்கத்தெரிந்த பொதுமக்கள்மத்தியில் வசன நூல்கள் பிரபல்யம் பெற்றன. உரைநூல்கள் அறிஞரும் ஆய்வாளரும் ஆர்வத்துடன் உசாவும் நூல்களாகப் பவனிவந்தன சந்தேகம் எழும்வேளைகளில் எல்லாம் நாவலரை மேற்கோள் காட்டிச் சரிசெய்யும் வழக்கமும் ஏற்படலாயிற்று.

இன்றும் நாவலர் பதிப்புக்களுக்கும் உரைகளுக்கும் வசன நூல்களுக்கும் பெருமதிப்பு இருந்து வருகின்றது. அதற்குரிய பிரதான காரணம் அவற்றில் பிழைகள்

இல்லாமையேயாகும் . சொற்பிழையோ பொருட்பிழையோ வசனப்பிழையோ அவரது பதிப்புக்களில் இருப்பதில்லை. (சிலர் பாடபேதப்பிழைகள் கண்டதுண்டு. எனினும் பலர் நாவலர் கண்டதே சரியெனக் கொண்டனர் ) மிகவும் முக்கியமாக அச்சுப்பிழை என்னும் அரக்கனை அவரது நூல்களில் காணமுடியாது. அவ்வளவிற்கு “ செய்வன திருந்தச் செய் “ என்பது அவரது இலட்சியமாக இருந்தது.

நாவலர் பெருமானுடைய தமிழ்ப்பணியிலிருந்து இன்று நாம் படிக்கவேண்டிய முக்கியமான பாடம் உண்டேல் அது “ பிழையின்றித் தமிழை எழுதுதல் வேண்டும். பிழையின்றி நூல்களை வெளியிடல் வேண்டும்” என்பதே. அவ்விதம் செய்வோமாயின் அதுவே தமிழ் சைவம் ஆகிய இரண்டையும் தமது கண்களாக மதித்து, அவை வாழப்பணிபுரிவதையே தமது வாழ்வின் குறிக்கோளாக்கொண்ட நாவலர் பெருமானுக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாக அமையும். பிழையற்ற படைப்புக்களே தமிழை அணிசெய்வன. தமிழை வளர்ப்பன.

## நாவலர் அவர்களின் பால பாடத்திலிருந்து ஒரு சிறு கட்டுரை:

சிசிலி என்னும் தீவிலே எட்னா என்கின்ற பெயருள்ள ஓர் எரிமலை இருக்கின்றது. சிலகாலங்களில் அதன் சிகரங்களிலிருந்து அக்கினி பொங்கி அதன் சாரலிலே பல திசைகளிலுஞ் சிந்துவது வழக்கம். ஒரு காலத்திலே, அந்த மலை மிகவும் அதிகமாக அக்கினியைக் கக்கிற்று. அப்போது, அம்மலையின் பக்கங்களிலுள்ள ஊர்களிலிருந்த சனங்கள் தங்கள் வீடுகளில் அந்த நெருப்புப் பற்றினபடியால், தங்கள் பொருள்களில் விலையேறப்பெற்ற சிற்சில பொருள்களை மாத்திரம் தங்களால் ஆனவரையில் எடுத்துக்கொண்டு, உயிர் தப்பி ஓடினார்கள். அவர்களுள், செல்வர்களாகிய இரண்டு பிள்ளைகள், தங்கள் திரவியங்களிற் சிலவற்றை மாத்திரம் எடுத்துக் கொண்டு ஓடினார்கள். அவர்களுடைய மாதாவும் பிதாவும் முதிர்ந்த வயதினர் ஆதலால், தங்கள் பிள்ளைகளோடு ஓடித் தப்ப முடியாதவர்களாய், அவர்களுக்குப் பின்னே மெல்ல மெல்ல நடந்து போனார்கள். அதுகண்ட பிள்ளைகள் இருவரும், ‘நம்மைப் பெற்று வளர்த்த மாதா பிதாக்களைக் காட்டிலும் இந்தத் திரவியங்கள் நமக்குப் பெரியனவா! நம்முடைய ஆஸ்திகளெல்லாம் போனாலும் போகட்டு மாதா பிதாக்களை இரக்ஷிப்பதே நமக்குக் கடமை’ என்று தங்களுக்குள்ளே ஆலோசனை செய்துகொண்டு, கையிலெடுத்த பொருள்களை எறிந்து விட்டு, தனித்தனி தாயையும் தகப்பனையும், தூக்கிக் கொண்டு, அந்த நெருப்புக்கு ஒருவாறு தப்பி ஓடிச் சென்று, ஒரு சௌக்கியமான இடத்தைச் சேர்ந்தார்கள்.

தந்தை தாய் பேண்’ என்னும் நீதிமொழியை அநுசரித்து, இந்தப் பிள்ளைகள் மாதா பிதாக்களைச் சுமந்துகொண்டு போன வழியானது ‘சற்புத்திர மார்க்கம்’ என்று சொல்லப்பட்டுப் பிள்ளைகளுடைய நீதியாகிய அறிவொழுக்கங்களை இன்றும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

# நாவலர் வீதி உருவான கதை



இன்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களை நாம் நீள நினைப்பதற்கு நம்மிடையே நிலவுகின்ற நினைவுச் சின்னங்கள், எச்சங்கள் பலவாகும். அவை பாடசாலைகள், படிப்பகங்கள், பண்ணைகள், நூல்கள், எனப் பலவாகும்.

இவற்றுள் நாவலர் அவர்களை நாம் நீள நினைப்பதற்கு ஏதுவாயுள்ளது நீளமான ஒரு வீதியாகும். அது கிழக்கில் அரியாலை மாம்பழச் சந்தியில் இருந்து மேற்கில் நாவாந்துறை வரை நீண்டதாகும்.

இன்றைய நாவலர் வீதி அன்று நாவாந்துறை வீதி என்றே பெயர் பெற்று நிலவியது. இதனூடாகப் போகும் புகைவண்டிப் வீதியோரமாக அமைந்த ஒரு தரிப்பு நிலையமும் நாவாந்துறைத் தரிப்பு என்றே பெயர் பெற்றிருந்தது.

இவ்வாறாக நாவலர் பாடசாலையில் 1932, 1933 ஆம் ஆண்டுகளில் ஆறாம், ஏழாம் வகுப்புகளில் பயின்று வந்த சரவணமுத்து முதலான மாணவர்களில் சிலர் குறும்புத்தனம் உள்ளவர்களாய் மூன்று சதத்து அஞ்சலட்டையும் ஆறு சதத்து முத்திரையும் வாங்கி தங்களுக்குள்ளேயே தபால்கள் எழுதி நாவலர் வீதி என விலாசமிட்டு, கீழே நாவாந்துறை வீதி என அடைப்புக்குறிக்குள் எழுதி அனுப்பி வந்தார்கள். நாளடைவில் இவர்களின் அபிமானத்தைக் கேட்டறிந்த நகர மாவட்ட சபைத் தலைவர் இ. சிவகுருநாதர் என்பார் இவ்விளைஞர்களைப் பாராட்டி அவ்வீதிக்கு நாவலர் வீதி எனப் பொதுமக்கள் அறியப் பெயரிட்டார்.

சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேர்ந்தது.

*நன்றி:*

***மில்க்வைற் செய்தி, ஆனி 1990,***

***கௌரவ ஆசிரியர்: க. சி. குலரத்தினம்.***

# ஆறுமுகநாவலர

**துர்க்காதுரந்தரி சிவதமிழ்ச் செல்வி**

**அமரர் கலாநிதி. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P**

நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே — எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேபிர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை.

அறிஞர்களால்தான் ஒரு நாடு பெருமையடைகின்றது. சோக்கிரட்டீஸ் தோன்றியதால் கிரேக்க நாடு நினைவில் வருகின்றது. ஆபிரகாம் லிங்கனால் அமெரிக்கா பெருமையடைகின்றது. சுவாமி விவேகானந்தரால் பாரத நாடு போற்றப்படுகின்றது. அதேபோல் நாவலர் பெருமானால் ஈழ நாடு பெருமையடைகின்றது. அவர் அவதரித்த காலம் யாழ்ப்பாண மக்கள் உண்மை அறிவிழந்து போலியில் மயங்கி அந்நியர் ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந்த ஒரு காலமாகும். இந்தச் சூழ்நிலையில் சிந்தித்துச் செயலாற்றினார் நாவலர் பெருமான். அவரெண்ணம் விரிந்து தாய்நாட்டிற்கும் சேய்நாட்டிற்குமிடையில் பேரிணைப்பை ஏற்படுத்தியது. சைவத்தையோ தமிழையோ வளர்ப்பது இயலாதென்று கண்டு இணைத்து ஒன்றாய் வளர்க்க வழிகாட்டினார் தானே வளர்த்துங்காட்டினார். இத்தகைய மகத்தான பணிபுரிந்த பெருமானுக்குச் சென்ற நூற்றாண்டில் சைவ உலகம் பாராட்டி நூற்றாண்டு விழாவையும் சிறப்பு மகாநாடுகளையும் நடத்தி தம் நன்றியைத் தெரிவித்தது. நாவலர் அவர்கள் ஆற்றிய சேவையை சைவத்தமிழ் மக்கள் என்றுமே மறக்க முடியாது.

## இளமைப்பருவத்திலே மேதாவி

கருவிலே திருவுடையவராக அவதரித்த "நாவலர்" அவர்களுடைய பிள்ளைத் திருநாமம் ஆறுமுகம் என்பதாகும். இவர்களின் முன்னோர்கள் சைவப்பற்றும் சீவகாருண்யமும் உடையவர்கள் அவர்களிலொருவரான ஞானப்பிரகாசர் என்பவரே பசுக் கொலைக்கு அஞ்சி இரவோடு இரவாக யாழ்ப்பாணத்தைவிட்டு இந்தியாவுக்குச் சென்றவராவார். அங்கு சிதம்பரத்தின்கண்ணே எழுந்தருளியுள்ள தில்லையம்பலவரை வணங்கித் தமதுமரபில் ஒரு சற்புத்திரர் தோன்றி இந்த நிட்டூர நிலையை நீக்கிச் சைவமக்களுக்கு விமோசனம் அளிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார். அவ் வழிபாட்டை ஏற்றுக் கொண்ட இறைவன் அருளினாற்றான் ஆறுமுகம் 1822ல் நல்லைநகரில் அவதரித்தார். இளமையிலேயே மேதாவிலாசம் உடையவராகவும் கூர்ந்த மெய்ஞ்ஞானமுடையவராகவும் விளங்கினார். தந்தையார் கந்தப்பிள்ளை சிறந்த அறிஞர், கலைப்பிரியர் அவர் பாடிக் குறையிலே விட்டுச் சென்ற நாடகத்தை

ஆறுமுகம் ஒன்பதாம் வயதிலேயே பூர்த்திசெய்தார். வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளையும் ஐயம் திரிபறக் கற்றார். அன்று ஆங்கிலக்கல்வி கற்கும் வாய்ப்பு மிஷநெறிமாருடைய கல்வி ஸ்தாபனங்களிலேயே கிடைத்தது. அங்கேயே சேர்ந்து ஆங்கிலக் கல்வியைக் கற்று வித்தகத் தன்மையைப் பெற்றதுமன்றித் தமிழ்ப் பண்டிதராகவும் அங்கு கல்வி கற்பிக்க அமர்த்தப்பட்டார். இதே காலத்தில் பார்சிவல்துரையினுடைய பாராட்டு அவருக்கு நிரம்பக்கிடைத்தது. விவிலியநூலைத் தமிழிழிலே மொழிபெயர்க்கும் பணியில் பெரும் புகழீட்டினார். இதனால் கிறித்தவர்களும் இவருடைய வித்துவத்தைப் போற்றினார்கள். பார்சிவல் பாதிரியார் அவர்கள் தமக்குத் தமிழ்கற்பிக்கும் ஆசானாக நாவலர் அவர்களை ஏற்றுக்கொண்டார்.

**பேச்சாற்றல்**

தமிழிலக்கண இலக்கிய நூல்களையும்' வேதாகம புராணங்களையும் கசடறக் கற்ற சிறப்பினால் பிழையற எழுதவும் நன்றாகப் பேசவும் ஆற்றலுடையவரானார். இவருடைய பேச்சாற்றலை வியந்த திருவாவடுதுறை மகாசந்நிதானமவர்கள் கற்றரவைக்கண் **"நாவலர்"** என்ற பட்டத்தைக் சூட்டிக் கௌரவித்தார்கள்

"ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன் றாம்புலவர்
வார்த்தை பதினாயிரத் தொருவர்"

என்று சொல்வது வழக்கம் வாக்குவன்மை சாதாரமாக எல்லோருக்கும் கிடைக்கும் பேறு அல்ல. நாவன்மைமிக்க நாவலர் அவர்கள் சென்ற நூற்றாண்டில் "பிரசங்கம்" என்ற நிகழ்சியை ஆலயங்களில் தொடக்கி வைத்தார். அன்று பாலர்முதல் விருத்தர் வரையிலும் பண்டிதர முதல் பாமரர் வரையிலும் இவர் சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயனடைந்தனர். நூற்றுக்கணக்கான நூல்களை விழுந்து விழுந்து படித்தாலும் அவற்றிலுள்ள கருத்துக்கள் பலர் மனதிற் பதியமாட்டா இக்குறைபாட்டைஓரளவு சொற்பொழிவுகளால் நீக்கலாம் என்பதை நாவலர் பெருமான் செய்து காட்டினார். வேதாகம உண்மைகளையும் புராணசாரங்களையும் விளக்கிச் சிவநெறியின் தொன்மையையும் சிவப்பரம்பொருளின் பேரருட்திறனும் விளங்கச் சொன்மாரி பொழிந்தவர் இவர். இவருடைய சொற்பொழிவில் பக்தி, வீரம், சோகம், நகைச்சுவை வியப்பு யாவும் ஒருங்கே கலந்து மிளிரும் இவருடைய விரோதிகளும் தம் பகை மறந்து கை கட்டி வாய் புதைத்து வாளாவிருந்து பிரசங்கங்களைக் கேட்டனர் என்பதை நாம் அறிகிறோம்.

சொலவல்லன் சோர்வில னஞ்சா னவனை
இகல்வெல்லல்ல யார்க்கும் அரிது

என்றார் வள்ளுவர். சைவமென்னும் பயிரை வளர்க்கப் பிரசங்கமென்னும் மழையைப் பெய்விக்கவேண்டும் என்பதுதான் அவர் கண்ட புது வழி. இதன்படி வெள்ளிக்கிழமைகள்

தோறும் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலில் பிரசங்கம் செய்துவந்தார். இவரது பிரசங்கத்தால் நன்மையடைந்தோர் மிகப்பலர். ஆனால் சொல்லுதல் எளிது, சொல்லியபடி நடப்பதுதான் மிகவரிது என்பார். நாவலர் அவர்களோ தான் எதனை அனுட்டித்தாரோ அதனையே மற்றவர்களுக்குச் சொன்னார். மாமிச போசனமும் மதுபானமும் மனிதனை அரக்கனாக்குவது என்பதை அழுத்தம் திருத்தமாக எடுத்துக்காட்டி விளக்கினார். இதனைக்கேட்டு மனந்திருந்திய பலர் அத்தீய பழக்கத்தைக் கைவிட்டனர். வீணரோடு கூடித் திரிந்து தமது நேரத்தை அவப்பொழுதாகக் கழித்த பலர் இவர் சொற்பொழிவுகளைக் கேட்பதில் காலத்தைப் பயனுடையதாக்கினார். ஏறக்குறைய 30 ஆண்டுகள் பிரசங்கங்கள் செய்தார். தமிழகத்திலும் சைவப்பிரசங்கங்கள் பலவற்றை ஆற்றியபோது சித்தாந்தத் தெளிவையும் செந்தமிழ் நடையையும், பக்திச் சிறப்பையும் ஒருங்கே கண்டு பலர் வியந்தனர். இவருடைய பேச்சில் இலக்கண வழுக்கள் மருந்துக்குமில்லை. சொற்பஞ்சமின்றி எவருக்கும் விளங்கப் பேசும் ஆற்றல் அக்காலத்தில் வேறெவரிடமும் காணமுடியாதிருந்தது.

நெற்றிக்கண்ணைக் காட்டியபோதும் உன் பாடல் குற்றமே குற்றமென்று எடுத்துக்கூறிய நக்கீரர் பரம்பரையில் வந்தவர் தான் நமது நாவலர் பெருமான். குற்றங்கண்ட வழி எவரையும் கண்டித்துப்பேசும் தன்மை இவருக்குண்டு. ஆனால் கண்டிக்கப்பட்டோர் திரும்ப இவரை எதிர்த்துப்பேசியதே கிடையாது. ஏனெனில் அழகும் சாதுரியமும் மிக்க அவரின் கண்டிக்கும் முறையில் அவர்கள் அடங்கியிருந்தனர். இதனால் கேட்பவர் யாவரும் மதுவுண்டு மயங்கும் மதுகரம் ஒப்ப மயங்கிவிடுவர். சைவத்தை இழித்தும் பழித்தும் பாதிரிமார் போதனை செய்தனர். அதனை ஏற்று அடிமை வாழ்வைப் பல தமிழ் மக்கள் மேற்கொண்டு சிறிய சலுகைகளை நோக்கிப் பெரியதோர் பண்பாட்டையிழந்து நின்றனர். இவர்களை ஆணித்தரமான முறையில் கண்டித்த நாவலர், இதனால் பாதிரிமார் வாயடைத்ததுமல்லாமல் நெறிமாறிய தமிழரும் சைவத்திற்குத் திரும்பினர். இதே நேரத்தில் நாவலரைப் பலர் எதிர்த்ததுமுண்டு. அந்த எதிர்ப்பின் மத்தியிலேயும் 'சிவனுண்டு பயமில்லை' என்று வாழ்ந்தவர் நாவலர்.

## எழுத்துப்பணி

அடுத்து அவருடைய எழுத்துப் பணியைக் கவனிப்போம். கிறிஸ்தவ குருமார்கள் தமது மதத்தைப் போதிப்பதற்கும் பரப்புவதற்கும் எவ்வாறு பிரசுரங்களை வெளியிட்டார்களோ அவ்வாறே சைவத்தைப் பரப்புதல் நலமெனக் கண்டார் நாவலர். திருமுறைகளின் சாரத்தையடக்கியும் சைவசித்தாந்த உண்மைகளை விளக்கியும் பாலபாடம் சைவவினாவிடை முதலிய நூல்களை எழுதி வெளியிட்டார். செய்யுள் நடையில் இருந்த பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம் என்பவற்றை வசனநடைக்கு மாற்றினார். அடியார் பெருமையையும் திருத்தொண்டின் மகிமையையும் விளக்கி பெரியபுராண சூசனம் என்ற நூலை ஆக்கினார். சிவாலய

வழிபாட்டு முறைகள் இவர் நூல்களால் மிகத் தெளிவாக்கப்பட்டன. நன்னூற் காண்டிகையுரை, இலக்கணச் சுருக்கம் என்பனவும் உயர்தர வகுப்பு மாணவர்க்கேற்ற முறையில் வெளியிடப்பட்டன. ஏடுகள் பலவற்றையும் துருவி ஆராய்ந்து திருக்கோவையார் முதலிய பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த பெருமையும் இவரையே சாரும். நாவலர் பதிப்பு ஒன்றே பிழையில்லாத பதிப்பு என்ற பெயர் அன்றும் இன்றும் நிலவுகிறது. தமிழில் இனிய வசனநடையைத் தொடக்கிவைத்த பெருமையும் நாவலருக்கேயுண்டு.

அன்னநடை பிடியினடை அழகுநடை யல்லவென அகற்றி அந்நாட்
பன்னுதமிழ்ப் புலவரிம் செய்யுணடை பயின்ற தமிழ்ப் பாவை யாட்கு
வன்னநடை வழங்குநடை வசனநடை எனப் பயிற்றி வைத்த ஆசான்
மன்னுமருள் ஆறுமுக நாவலன்றன் ஒழுக்கநடை போல வாழி

என்று பாராட்டினார் யாழ்ப்பாணத்து நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர். இன்னும் 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனவும் போற்றப்பட்டார். தமிழ்வசன நடைக்குப் புதுவடிவங் கொடுத்ததோடமையாது தரிப்புக் குறிப்புக்களையும் இட்டுப் புதுமை செய்தார். முதன் முதல் இப்பணியில் ஈடுபட்டவர் இவரே. சொற்களையோ, சொற்றொடர்களையோ வசனங்களையோ பிழையின்றி எழுதுவதிலும் பதிப்பிப்பதிலும் இவருக்கு நிகர் இவரே.

## நிறுவனங்கள்

சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பணி ஆற்ற வேண்டுமானால் அச்சுக்கூடங்களை அமைத்து நூல்களை வெளியிடவேண்டும் என்றும் அவருடைய சிந்தனையில் பட்டது. அதற்கான நிதியைத் திரட்டுவதிலும் பெரும்பாடு பட்டார். அயரா உழைப்பின் பேரில் வண்ணார்பண்ணையிலும், சிதம்பரத்திலும் வித்தியாசாலைகளை அமைத்து அச்சுக்கூடங்களையும் நிறுவினார். இறைவன் அருளால் அவ்வப்போது இதற்கான பண உதவி கிடைத்தது.

1850ஆம் ஆண்டு முதன் முதல் இலவசக் கல்வியைத் தொடக்கி அளித்த மகான் நாவலர் அவர்களே. இந்த நிறுவனங்களின் மூலம் வருடாவருடம் தமிழையும் சைவத்தையும் முறையாகப் போதிக்கக்கூடிய போதக ஆசிரியர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் தோன்றினர். இன்றும் அந்தக் கல்விப் பரம்பரையிலே வந்த ஒரு சிலரே இப்பணியில் உழைத்து வருகின்றனர் என்றால் அதில் மிகையொன்றுமில்லை. அவராக்கிய நிறுவனங்கள் இன்றும் பெரும்பணி ஆற்றிவருவது கண்கூடு.

## எமது குரு

நாவலர் பெருமானை சென்ற நூற்றாண்டிலே நம் நாட்டிலே அவதரித்த 'ஐந்தாம் குரவர்' என்று பலரும் போற்றுவர். இதனால் வருடாவருடம் மார்கழித்

திங்களில் இவருடைய குருபூசை விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இன்று வெண்ணீறு பூசுவோர், விரதமனுட்டிப்போர், திருவிழா எடுப்போர், பிரசங்கம் செய்வோர், புராண படனம் ஆற்றுவோர் யாவரும் நாவலர் ஐயா அவர்களின் வழிழயையே பின்பற்றிச் ெல்கின்றனர். அவரே எமக்குக் குரு. அவர் நால்வர் வழியில் நின்றதுமன்றி நிற்கவும் எமக்கு வழிகாட்டியவர். அவருடைய சமயமுறையைப் பற்றி மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் கூறுகிறார்.

கருள்விரவு தலைக்கழிக்கும் கண்மணியும் வெண்ணீறும்
பொருள்விரவும் ஐந்தெழுத்தும் பொருளாகக் கொண்டுவப்போன்
தெருள் விரவு சுத்தசைவ சித்தாந்தப் பெருஞ்செல்வன்
அருள் விரவு பரவுபுகழ் ஆறுமுக நாவலனே.

நமது நால்வர் பெருமக்களும் இதே வாழ்க்கையையே வாழ்ந்தார்கள். சைவத்தை நிலைநாட்டினார்கள். திருமுறைகளைத் தந்தார்கள். சிவாலய தரிசனம் செய்ததார்கள். மறுசமயத்தின் தாக்குதலைத் தடுத்தார்கள். அரசியல், சமுதாயம் என்பவற்றிற புகுந்து நல்நெறிக்கு வழிகாட்டினார்கள். இதே வரிசையில் பெரும்பணியாற்றியவர்கள் நாவலர் ஐயா அவர்கள். பெரும் பஞ்சத்தைப் போக்குவதற்காக கஞ்சித்தொட்டித் தருமம் ஒன்றை ஏற்படுத்தினார். இதனால் பலர் பட்டினி தீர்ந்து நலமடைந்தனர். நாட்டிலே கொடிய கொள்ளைநோய் தோன்றி மக்கள் உயிரை வதைத்தபோது உடனடியாக அதனை அரசியலாளருக்கு அறிவித்து ஆவனசெய்து நாட்டுநலனைப் பேணி மக்களுக்கு வாழ்வு கொடுத்தார். தமிழ்ப் பெருந் தலைவராகச் சேர். பொன். இராமநாதனைச் சட்டசபைக்கு அனுப்பி வைத்தார். இவ்வாறு மகத்தான சமூகப்பணிகள் ஆற்றி சமுதாய நலனைக் கண்ணுங் கருத்துமாகப் பேணியவர் அவர்.

நாவலர் வழியில் நாமும் சென்று சைவத்தையும் தமிழையும் பேணி நாட்டு மக்கள் உள்ளத்திலே தூய வாழ்வை நிறுவுவதற்கு வழி காண்போமாக!

ஆரூர மாணிக்கவாசக நில்லைத் திசையளந்த
பேரூரு மாறுமுக நாவலனில்லைப் பின்னிங்கியார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கும் நீர்மையரே.

# ஆறுமுகநாவலர் பற்றி பெரியார்கள்

## அமரர் கல்கி கிருஷ்ணமூர்த்தி

ஈழ நாட்டில் தமிழர்கள் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே குடியேறினார்கள். தமிழகத்தோடு எப்போதும் தொடர்பு கொண்டிருந்தார்கள். தமிழையும் தமிழர் நாகரிகத்தையும் சமயத்தையும் வளர்த்தார்கள்.

சில காலமாகத் தமிழ் மறுமலர்ச்சி என்பது பற்றி அடிக்கடி கேள்விப்பட்டு வருகிறோம். தமிழ் மறுமலர்ச்சிக்குக் காரணமானவர்கள் என்று பலருடைய பெயர்களும் சொல்லப்படுகின்றன. ஆனால் உண்மையில் தமிழ் மறுமலர்ச்சிக்கு ஆதிகாரண புருஷர் யார் என்று ஆராய்ந்து பார்த்தோமானால் அவர் ஈழ நாட்டைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் என்பது தெரியவரும்.

பழைய காலத்தில் தமிழ் வசனம் அபூர்வமாயிருந்தது. அபூர்வமாயிருந்த வசனமும் சங்கச் செய்யுள் நடையைவிட கடினமான நடையில் இருந்தது. இல்லையென்றால், இலக்கண வழுக்கள் நிறைந்த கொச்சைத் தமிழில் ஒரு பக்கம் முழுவதையும் ஒரே வாக்கியத்தினால் நிறைக்கும் அசம்பாவித வசன நடையாயிருந்தது. பிழையில்லாத எளிய தமிழ் வசன நடையை முதன் முதலில் கையாண்டு காட்டி வெற்றி கண்ட பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரே ஆவர்.

## எஸ். சோமசுந்தர பாரதியார்

**(அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்)**

யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் ஒரு அவதார புருஷர். இடையிருட் கடைக்காலத்தில் விடியுமுன் விசும்பில் விளங்கும் வெள்ளிபோலத் தமிழகத்தில் தளரும் சைவமுந் தமிழுந் தழைய அவ்விரண்டிற்கும் புத்துயிர் வழங்கப் பிறந்த வள்ளலாவார். முன்னே பல காலங்களிலும் தமிழகத்திலிருந்து தான் பெற்ற சில சில சிறு நன்மைகளை வட்டியுடன் பெருக்கி, ஒரு காலத்து ஒருமுகமாகப் பழங்கடனைத் தீர்த்து, என்றுந் தீர்க்கொணாவாறு தமிழகத்தை ஈழநாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரி நாவலரென்றால் மிகையாகாது"

# யாழ்ப்பாணத்து நல்லூர் தவத்திரு ஆறுமுக நாவலரவர்கள்

"தமிழ் சைவம் இரண்டும் என் இரு கண்கள் அவ்விரண்டும் ஒளி குன்றாமல் இறுதிவரை காத்துப் பயன் கொள்வதே என் கடன் அவை வாழப் பணி புரிவதே என் வாழ்வின் குறிக்கோள்", என வாழ்ந்தவர் தவத்திரு ஆறுமுக நாவலரவர்கள்.

அவர் யாழ்ப்பாணம் நல்லூரில் கந்தருக்கும், சிவகாமிக்கும் 1822 டிசம்பர் 12ல் (சித்திரபானு மார்கழி 5) தோன்றியவர்.

அவர் தமிழ் இலக்கிய இலக்கணச் சித்தர் சாத்திரங்கள், சிவாகமங்கள் கற்றவர் ஆங்கிலத்திலும் ஸமஸ்கிருதத்திலும் வல்லவர் சிவனடியை மறவாத சிந்தனையாளர் உரைநடை கைவந்த வல்லாளர் நல்லாசிரியர் நூலாசிரியர் உரையாசிரியர் பதிப்பாசிரியர் சொல்லின் செல்வர் தனக்கென வாழாத் தகைமையாளர் தவக்கோலச்சீலர் இல்லறம் ஏற்காது நற்பணி செய்தவர்.

அவர் இயற்றிய நூல்கள்: 23 உரை செய்தவை: 8 பரிசோதித்துப் பதிப்பித்தவை: 39 யாத்த பாடல்கள்: 14.

விவிலிய நூலுக்குச் சிறந்த மொழிப்பெயர்ப்பு செய்தது, திருக்குறள் பரிமேலழகர் உரையை முதலில் பதிப்பித்தது, பெரிய புராண வசனம் எழுதியது அவருடைய பெருமைக்குச் சான்றுபகர்வன. அவர் இயற்றிய சைவ வினா விடை, பாலபாடம் இன்றும் போற்றப் படுபவையாகும்.

யாழ்ப்பாணத்திலும், சிதம்பரத்தில் மேலவீதியில், சைவப்பிரகாச வித்தியாசாலை (1864) (தற்போது மேல்நிலைப்பள்ளி) சென்னையில் வித்தியானுபாலன அச்சியந்திர சாலை (1860) ஆகியவற்றை நிறுவியவர். சிதம்பரம் ஞானப்பிரகாசர் திருக்குளம் வடகரையில், அவருடைய விருப்பப்படி, சேக்கிழார் கோயில் நிறுவப்பட்டது (1890).

திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்களால் 'நாவலர்' ட்டம் பெற்றவர் (1865).

அவருடைய சமகாலச் சான்றோர்களில் சிலர் யாழ்ப்பாணத்தில் சங்கரபண்டிதர், சிவசம்புப் புலவர், ராவ்பகதூர் சி.வை.தாமோதரம் பிள்ளை, விஸ்வநாதப் பிள்ளை, பர்சிவல்துரை தமிழ்நாட்டில், சிதம்பரம் வடலூர் இராமலிங்க அடிகளார், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மகாலிங்க அய்யர், இராமநாதபுரம் பொன்னுசாமிதேவர், அவருடைய மாணக்கர்களில் சிலர்: சதாசிவம் பிள்ளை (முதல் மாணாக்கர்), பொன்னம்பலம்பிள்ளை, செந்தில்நாத அய்யர், கைலாசப்பிள்ளை.

1879 டிசம்பர் 5ல் (பிரமாதி கார்த்திகை 21 மகம்) சிவப்பேறு பெற்றார்.

"தமிழ்க்குலம் உலகப்புகழ் எய்தத் தாழாதுஞற்றுங்கள் அஃதொன்றே எனக்குத் தமிழர் செய்யும் கைம்மாறு". – ஆறுமுக நாவலர்.

# நாவலரும் கீரிமலைச் சிவன் கோயிலும்

ஈழத்துச் சிவாலயங்களின் பண்டைய வரலாற்றை நாவலர் நன்கு அறிந்திருந்தார். மாதோட்டம், கீரிமலை போன்ற இடங்களில் முன்பு இருந்த சிவன் கோவில்கள் அழிவுற்ற வரலாற்றை அவர் அறிந்திருந்தார். முன்னர் சிவாலயங்கள் இருந்த இடங்களில் புதிதாகக் கோவில் கட்ட விழைந்தார். திருக்கேதீச்சரம் பற்றி யாழ்ப்பாணச் சமயநிலை (1872) என்ற வெளியீடு மூலம் சைவ மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

கீரிமலைச் சிவன் கோவிலை மீண்டும் கட்டுவதர்குரிய காலமும் இடமும் பற்றிச் சோதிட வல்லுநர் இரகுநாதையருடனும் அராலிச் சிற்பாசாரியார் அ. சுவாமிநாதருடனும் நாவலர் கலந்தாலோசித்தார். அவ்வுத்தமோத்தம சிவதருமத்தின் பொருட்டு பொது மக்களின் பொருளுதவியை நாவலர் நாடினார். 1878 வைகாசித் திங்கள் 24 ஆம் நாள் கீரிமலைச் சிவன் கோவில் என்னும் தலைப்பில் துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டார். (இத்துண்டுப் பிரசுரம் நாவலர் சிவபதமடைந்தபின் 1880 ஐப்பசி 25 ஆம் திகதிய உதயபானு பத்திரிகையில் மறுபிரசுரஞ் செய்யப்பட்டது).

நாவலர் கீரிமலையில் சிவாலயம் அமைக்க எடுத்த முயற்சி நிறைவேறுமுன் அவர் சிவபதமடைந்து விட்டார். அவர் சிவபதமடைந்த சில ஆண்டுகளின்பின் சைவ உதயபானு, இலங்கைநேசன் முதலிய செய்தித்தாள்கள் அவர் வழியில் சென்று விடுத்த விளம்பரங்களினால் சைவமக்கள் விழிப்புற்று இவ்வாலயப் பணியை நிறைவேற்றினர்.

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களால் 1878-5-24இல் வெளியிட்ட துண்டுப்பிரசுரம்.**

யாழ்ப்பாணத்திலே மாவிட்டபுரத்திற்கு வடமேற்கே 2 மைல் தூரத்திலுள்ள கீரிமலையிலே, ஆதியில் ஒருபெரியசிவன்கோவில் இருந்தது.அதுபோர்த்துக்கீசரால் இடிபட்டது. கிரிமலையில் அடியினின்றுஞ் சுத்தசலம் ஊற்றெடுத்து கடலினுள்ளே பாய்கின்றது. அந்தச்சங்கமம்புண்ணிய தீர்த்தம் விசுவசித்ததன்றோ. யாழ்ப்பாணம் எங்குமுள்ள சைவசமய சனங்கள் விசேட தினங்களிலே அங்கே போய் ஸ்நானஞ் செய்கிறார்கள். அநேகர்அங்கே சங்கற்பம் செய்து, ஒரு மண்டலம், அரைமண்டலம் ஸ்நானஞ்செய்து கொண்டிருக்கிறார்கள். அநேகர் அந்தியேட்டி, சிரார்த்தம் முதலிய கிரியைகளை அங்கே போய்ச் செய்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஸ்நானஞ் செய்தவுடனே சுவாமி தரிசனஞ் செய்யும் பொருட்டு அங்கே ஒரு கோயிலில்லில்லையே. யாழ்ப்பாணத்தில் எத்தனையோ இடங்களிலே கோயில் சமீபத்தில் இருக்கவும், புதிது புதிதாக கோயில் கட்டுவிக்கின்ற நம்மவர்கள், எல்லாச்சனங்களும் பொதுத்தலமாகிய கீரிமலையிலேயே ஒரு கோயில் கட்டுவிக்க இதுவரையும் நினையாதது என்னையோ?

கீரிமலையிலே ஒரு கோயில் கட்டுவித்து, சிவலிங்கப்பிரதிஷ்டை செய்வித்து, நித்திய பூசை நடத்துவிப்பது மேலாகிய சிவதர்மம். தலவிசேட தீர்த்த விசேடத்தோடு மூர்த்தி விசேடமும் கூடுமாயின், மிக நலமாமே. யாழ்ப்பாணத்துச் சனங்கள் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்வார்களானால் இந்த சிவதர்மத்தைத்தொடங்கி நிறைவேற்றலாம்.

1. சனங்கள் இந்தச் சிவதர்மத்தின் பொருட்டுப் பணமாகவேனும், மரம், கல், சுண்ணாம்பு முதலிய உபகரணங்களாகவேனும் தங்களாலியன்றது கொடுத்தல் வேண்டும்.
2. கீரிமலையிலே அந்தியேட்டி, சிரார்த்தஞ் செய்யும் சனங்கள் தகுதியாகிய தானம் இரண்டு இந்தசிவதர்மத்தின் பொருட்டுக் கொடுத்தல் வேண்டும்.
3. கீரிமலையிலே அந்தியேட்டி செய்யும் குருமார்கள் அந்தியேட்டி தக்ஷணையிலே அந்தியேட்டி ஒன்றுக்கு கால் ரூபா வீதம் இந்த சிவதர்மத்தின் பொருட்டுக் கொடுத்தல் வேண்டும்.
4. கீரிமலையிலே விசேஷ தினங்களில் போய் ஸ்நானம் செய்கின்ற சனங்கள்இந்தச் சிவதர்மத்தின் பொருட்டுஅங்கே வைக்கப்படும் உண்டியப் பெட்டியிலே தங்கள் தங்களாலியன்ற பணத்தொகை போடல் வேண்டும்.
5. கீரிமலைக்குச் சமீபத்தில் உள்ள ஊர்களில் வசிக்கின்ற சைவசமய சனங்கள், தங்கள் தங்கள் நிலங்களிலே நெல், சிறுதானியம், காய், கனி, வெற்றிலை முதலிய பலங்கள் உண்டாகும் பொழுது அவைகளிலே தங்களாலியன்றது இந்தச் சிவதர்மத்தின் பொருட்டுக் கொடுத்தல் வேண்டும்.
6. கீரிமலைக்குச் சமீபத்திலுள்ள ஊர்களில் வசிக்கின்ற சைவசமயசனங்கள் இந்தச் சிவதர்மத்தின்பொருட்டுத்தங்கள் தங்கள்வீடுகளிலே போடப்படுகிறகுட்டான் களிலே நாளொன்றுக்குஒருபிடி அரிசிபோட்டு அந்தஅரிசியை மாசமுடிவில் வருந் தண்டலாரிடத்தில் ஒப்பித்தல் வேண்டும்.
7. காங்கேசன்துறையிலே அரிசில், நெல் இறக்குமதி செய்கிற வியாபாரிகள் அரிசி கரிசைஒன்றுக்கு ரூபா அரை, நெல்கரிசையொன்றைக்கு ரூபா கால் வீத மகமை இந்தச் சிவதர்மத்தின்பொருட்டுக் கொடுத்தல் வேண்டும்.
8. தகுதியாகிய பணத்தொகை வைத்துக்கொண்டு சிவதர்மம் செய்யவிரும்பு கிறவர்கள் கீரிமலைச் சிவன்கோயிலிலே தங்கள்தங்களால் இயன்ற திருப்பணி செய்வித்துக் கொள்ளலாம். அவரவர் பெயர் வெட்டப்படும்.

இங்ஙனம்
க. ஆறுமுகநாவலர்
வண்ணார்பண்ணை.

நன்றி : நகுலேஸ்வர குரு பவளவிழா மலர் 2000-12-03

# நாவலரும் இராமநாதனும்

அமரர் க. சொக்கன் அவர்கள்

"நமக்கு முன்பு இன்றுள்ள கடமை, தகைசான்ற இந்தப் பெருமகனின் (சேர். முத்துக்குமார சுவாமியின்) இடத்திற்குத் தகுதி வாய்ந்த ஒருவர் யார் என்று காண்பதே. சட்டசபையிலே எமது பிரதிநிதியாக அமர்பவர் தமிழராயிருத்தல் வேண்டும். அவர் சிறந்த கல்விமானாய் விளங்க வேண்டும். உயர்ந்த கொள்ளையுடையவராய் இருத்தல் வேண்டும். நல்ல செல்வ வசதி பெற்றிருத்தல் வேண்டும். உயர்ந்த சமூகத்திலே பழகக்கூடிய நல்வாய்ப்பு உடையவராதல் வேண்டும். தமது கருத்துக்களிற் சுதந்திரராயும் எந்தச் சூழலிலும் எவ்வித அச்சமுமின்றி அக் கருத்துக்களை வெளியிட வல்லவராயுமிருத்தல் வேண்டும். இவையாவிலும் மேலாக அவர் ஆள்வோராதும் ஆளப்படுவோரதும் மதிப்பிற்கு உரியவராதல் இன்றியமையாதது. பெரியோர்களே, பொறுமையோடு ஆராய்ந்தால் மேற்கூறிய பண்புகள்யாவும் பொருந்தியவர் பொன்னம்பல முதலியார். இராமநாதன் அவர்களே என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.. இங்குள்ளவர்களில் எவரும் திரு. இராமநாதனின் நம்பிக்கையற்றவராய் இரார் என்பது என் நம்பிக்கை. எனவே பின்வரும் பிரேரனையை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

தமிழ் இனத்தின் தலையாய உறுப்பினர்களாகிய நாம் திரு.பொன்னம்பல முதலியார் இராமநாதன், எமது பிரதிநிதியாய் அமர்வதற்கான எல்லாத் தகுதிகளும் வாய்ந்தவர் என்று ஏகமனதாகத் தீர்மானிக்கின்றோம். சமூகத்தின் உயர் அந்தஸ்தில் விளங்குபவரும் சுதந்திரமான வருவாயை உடையவருமாகிய இவரே எல்லா வகையிலும் தகுதிவாய்ந்த வேட்பாளர்என்று இந்தக்கூட்ட உறுப்பினர் யாவரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

1879ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி பி.ப 2மணியளவில், நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே, யாழ்ப்பாணத்தின் உயர்மட்டத்தினரும் கல்விமான்களுக்குமான 3000 பேர்வரை கூடியிருந்த கூட்டத்திலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் பிரேரித்த பிரேரணையும் அப்பிரேரணையை ஒட்டி அவர் நிகழ்த்திய சொற்பொழிவின் ஒரு பகுதியையும் மேலே தரப்பட்டுள்ளன. இலங்கைச் சட்டசபையிலே, கல்விகற்ற தமிழரின் பிரதிநிதியாய் விளங்கிய சேர். முத்துக்குமாரசுவாமியின் (1833 – 1879) மறைவினைத் தொடர்ந்து அவரின் இடத்திற்கு ஒருவரை நியமிப்பது பற்றித் தெரிவிக்க நடந்த கூட்டமே அது. அதனைக் கூட்டுவித்தவர் ஆறுமுகநாவலர் நாவலர் பரிந்துரைத்துப் பிரேரித்த வேட்பாளரான இராமநாதனுக்கு அப்பொழுது வயது 29. அவர் கொழும்பு வாசி. நியாயவாதித் தொழிலில் ஈடுபட்டுச் சிறிது சிறிதாக முன்னேறிக் கொண்டிருந்த அவருக்கு யாழ்ப்பாணம் புதிது. மானிப்பாயே இராமநாதனின் தாயகமெனினும் அவர்' பிறந்தும் வளர்ந்தும் வாழ்ந்ததுமெல்லாம் கொழும்பிலே தான். இத்தகைய ஒருவரையே நாவலர் தமிழருக்குப் பிரதிநிதியாய் அமர்த்த விரும்பினர்.

இராமநாதனுடன் போட்டியிட்ட வேட்பாளர் சாதாரணரல்லர். இராமநாதனின் சகலன் திரு. கிறிஸ்ரோப்பர் பிறிற்றே என்பவரே அவர். பிறிற்றே பர்கத்தாப் பல்கலைக்கழகக் கலைமாமணி பட்டதாரி. புகழ்பெற்றநியாயவாதி. மாவட்ட நீதிபதியாகவும் பணியாற்றியவர். யாழ்ப்பாணத்தில் அவரின் ஆதரவாளர்கள் பெருந்தொகை யினராக இருந்தார்கள். நாவலர் தமது சைவப்பிரகாச வித்தியசாலையிலே இராமநாதனை ஆதரித்து நடத்திய கூட்டத்தைப் போன்று பிறிற்றோவின் ஆதரவாளர் யாழ்ப்பாணம், கோப்பாய், மல்லாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை, புத்தளம், கம்பளை, மட்டக்களப்பு, காலி ஆகிய இடங்களிலே கூட்டங்கள் நடாத்தினர். எனினும் மாட்சிமை தங்கிய தேசாதிபதி, ஜேம்ஸ் ஆர். லோங்டன், நாவலரும் அவரைச் சார்ந்தோரும் பரிந்துரைத்த பொன்னம்பல முதலியார் இராமநாதன் அவர்களையே சட்டசபை உறுப்பினராய் நியமித்தார். இராமநாதன் நியமனம் பெற்றதற்கான காரணத்தினைச் செவிவழியச் செய்தியாலும் ஒரளவு அறிந்து கொள்ளலாம். " நாவலர் எழுந்தார்" என்ற கட்டுரையில் பண்டிதமணி இதனை நாடகத்தன்மையுடன் விவரித்திருக்கிறார்.

இராமநாதன் துரை (1850 – 1930) இலங்கையின் தேசிய, கலாசார சமய வரலாற்றிலே சாதித்தவற்றை இருந்து பார்க்க நாவலருக்கு வாய்ப்புக்கிட்டவில்லை. அவர், இராமநாதன் சட்டசபைக்குத் தெரிவு பெற்ற அதே ஆண்டில் (2-12-79 இல்)இறையடி எய்தினார்.

1884 ஆம் ஆண்டு பெரவரி மாதம் 11ஆந் திகதியன்று சட்டபபையிலே இராமநாதன் உரையாற்றியபொழுது நாவலர் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"சகிப்பின்மையானது வேறு வேறு காலங்களிலே வேறு வேறு சூழ்நிலைகளிலே அவர்களிடையே (மிஷனறிகளிடையே காணப்பட்டது . ஆனால் இற்றை நாளிலே அது சிறப்பாக அவதானிக்கக் கூடியதாய் இருக்கின்றது. 1879 இலே இந்துக்களின் தலைமைசால் சீர் திருத்தவாதியின் மரணத்தின் பின்னர் தான் இந்த நிலை"

மாட்சிமை தங்கிய தேசாதிபதி சேர் அர்தர் 'மில்டன் கோடன் நீங்கள் யாரைப்பற்றிக் கூறினீர்கள்?

மாண்புமிகு சேர். இராமநாதன் இந்துக்களின் தலைமைசால் சீர்திருத்தவாதி ஆறுமுகநாவலர்பற்றி

நாவலர் ஆங்கில ஆட்சியின் தொடக்க காவத்திலே தோன்றியவர். ஆங்கிலமொழிக் கல்வியின் தொடக்க நிலையிலே வெஸ்லியன் மிஷன் பாடசாலையிலே ஆங்கிலம் கற்றவர். ஆங்கில கல்வியினூடாக நுழைவு பெறாத காலத்திலே அவரின் மாணவப்பருவம் கழிந்தது.

யாழ்ப்பாணத்திலே தொடக்கப்பட்டபள்ளிகள் யாவும் மிஷனரிகளாலே தொடங்கப்பட்டவை. மிஷனரிகளின் நோக்கம் ஆங்கில நாகரிகத்தைப் புகுத்துவதன்று,

கிறிஸ்தவத்தைப் பரப்புவதே. எனவே அவர்கள் தமது கல்விமுறையிலே சைவத்தைப் பரப்புவதே. அவர்கள் அவர்கள் தமது கல்விமுறையிலே சைவத்தச் சாடுவதும் கிறித்தவத்தின் பெருமையை எடத்துரைப்பதுமே குறியாகக் கொண்டிருந்தனால், நாவலர் போன்றோரின் உடை, நடை, பாவனைகளிலே அதிக கவனமோ அவற்றை மாற்ற வேண்டுமென்ற எண்ணமோ கொண்டிருக்கவில்லை என்றே தெரிகிறது. "பார்சிவல் துரைக்குப் பண்டிதராகும்போது நாவலர் தாம் ஒருபோதும் விபூதி அழிக்கமாட்டாரென்றும், உத்தூளனம், திரிபுண்டரம் ஆகிய இருவகையானும் விபூதி தரித்துக் கொண்டுதான் வருவாரென்றும், தாம் கிறிஸ்து மத கண்டனம் செய்வதைப் பற்றிக் குறை சொல்லக் கூடாதென்றும் இவை முதலாகிய நிபந்தனைகளையெல்லாம் கற்றுக் கொண்டார். பார்சிவல் துரையும் தமக்குக் கீழேயுள்ள கிறிஸ்தவர்கள் பலர் பஞ்சாட்சரக் (சம்பளம்) கிறிஸ்தவர்களென்றும் சைவருள்ளும் இவரொருவரே சரியானவரென்றும் நிச்சயமாக அறிந்து கொண்டபடியாலும் தமக்கு நாவலர் போன்ற வேறு பண்டிதர் அகப்படாமையாலும் அவருடைய கேள்விகளுக்கெல்லாம் உடன்பட்டுக் கொண்டார்.

19 ஆம் நூற்றாண்டின் பிற்கூறு இராமநாதன் கல்வி கற்ற காலமாகும். அக்காலத்தில் ஆங்கிலம் அரியணையில் நிலையாக இடம் பெற்றுவிட்டது. சமயசார்பிலிருந்து விடுபட்டு ஆங்கில அரசிற்கு விசுவாசமான உழைக்கக்கூடிய ஒரு கூட்டத்தினரை உற்பத்திசெய்யும் யந்திரமாக ஆங்கிலக் கல்வி மாறிவிட்ட காலத்திலே தான் இராமநாதன் கொழும்பிலுள்ள இராணி கலைக்கழகத்தில் (Queen's Academy இன்றய றோயல் கல்லூரி) மாணவராகச் சேர்ந்தார். அக்காலத்தில் அந்தக் கலைக் கழகத்தின் முதல்வராய் விளங்கியவர் கலாநிதி பாக்குறெப்ற் போக் Dr. Barcroft Boake என்பவர். அவர் சிறந்த கல்விமான். 'தமது மாணவரிடையே கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் அயரா முயற்சித் திறனையும் ஆழப்பதிப்பித்தவர். அவரின் ஆளுமையும், தாய்மாமனான சேர். இராமநாதனை ஆங்கிலக் கல்விக்கும் வாழ்க்கை முறைக்கும் ஆற்றுப்படுத்தின. பணம், பட்டம், பதவி ஆகியவற்றால் சாமானியரிலிருந்து மேலுயர்ந்து உருவாகிக்கொண்டிருந்த பிரபுத்துவக் குடும்பம் ஒன்றின் உறுப்பினர் பெறக்கூடிய, பெறவேண்டும் என்று கருதப்பட்ட கல்வியினை இராமநாதன் பெற்றார். இதனால் நடை, உடை, பாவனைகளிலே அக் காலத்தில் அவர் ஒரு 'பிறவுண் சாகிப்' ஆக அறிந்திருப்பார் என்று எதிர்பார்ப்பது நியாயமானதே.

"அவரின் இளமைக் காலத்தில் அவர் மேற்றிசை நாகரிகத்துக்கு ஆட்பட்டிருந்தார். ஆடம்பரமான மீதுணும், குடிவகைகளும் அவராலேயே பயன்படுத்தப்பட்டன. தரமான விஸ்கியின் சுவை அவருக்குத் தெரிந்திருந்தது. ஆங்கிலப் பிரபு ஒருவர் தமது பரந்த பொழுது போக்கு பயணத்தின்போது இலங்கையில் இராமநாதனின் விருந்தினராகத் தங்கியிருந்து அன்னாரின் விருந்துயர்தற் பண்பை அனுபவித்துள்ளார். அந்தப்பிரபு கிழக்கு நாடுகளிலே சிறந்த விஸ்கியைத் தான் அருந்தக் கிடைத்ததும், சிறந்த ரெனிஸ் மைதானத்தில் விளையாடக்கிடைத்ததும்

இராமநாதனின் " சுகஸ்தானிலேயே" என்று குறித்துள்ளார். இதனோடு இராமநாதன் மேற்கு நாட்டுப் பாணியில் உடை அணிவதிலும் எல்வூட் தொப்பியை பயன் செய்வதிலும் பெருமையடைந்தார். சேர் முத்துக்குமாரசுவாமியின் செல்வாக்கினால் இராமநாதனும் அவர்தம் சகோதரர்களும் தமது குடுமிகளை இளம் வயதிலே நீக்கிக் கொண்டனர் எனவும் தெரிகிறது. இராணி கலைக்கழகக் கல்வியின் பின்னர் சென்னை இராசதானிக் கல்லூரியிலே பட்டதாரிக் கல்வியை இராமநாதன் தொடர்ந்த போதிலும் அதனை நிறைவு செய்யாமலே நாடு திரும்பினர். பின்பு அக்கால நியாயவாதிப் பயிற்சியை ஈராண்டுகளில் முடித்து நியாயவாதியானார்.

ஆக நாவலரின் கல்விமுறையியின்றும் இராமநாதனின் கல்விமுறை தலைமுறை இடைவெளிகாரணமாகவும் சூழல் காரணமாகவும் பெரிதும் வேறுபட்டிருந்தது. இளம் வயதிலே தமது ஆங்கிலக் கல்வியோடு இருபாலைச் சேனாதிராஜா முதலியார், சரவணமுத்துப்புலவர் ஆகியோரிடம் தமிழையும் தமது சுயமுயற்சியாலேயே சமஸ்கிருதமொழியையும் நாவலர் கற்றுத் தேர்ந்தவர் இடைவிடாத கடும் உழைப்பினாலும் ஆசிரியத் தொழிலைப் பயன்கருதாது பணியாக மேற்கொண்ட பரந்த அனுபவத்தினாலும் நாவலர் தம்மைப் பேரறிஞராய் இளமையிலேயே ஆக்கிக் கொண்ட முறைமைக்கும் இராமநாதனின் முறைமைக்கும் எவ்வளவோ வேறுபாடிருந்தது. எனினும் இராமநாதன் சென்னையில் வசித்தபோது தமிழ்தந்த தாமோதரம்பிள்ளையின் மேற்பார்வை கிடைக்கப் பெற்றதாலும், தருமவானான தம் தந்தையாரின் சமயவாழ்வின் செல்வாக்கினாலும், பிற்காலத்தில் அருட்பரானந்த சுவாமிகளின் உபதேசங்களாலும் இளமைக் கல்வியின் போது விவிலிய வேதங்களையும் மெய்யியலையும் ஒழுக்கவியலையும் கற்கக் கிடைத்த வாய்ப்பினாலும் இராமநாதன் கல்லூரியிலே அவர் நியமித்த வடமொழி, தென்மொழிப் பண்டிதர்களின் உதவியினாலும் இவையாவிலும் மேலாகத் தமது கூர்ந்த மதியினாலும் சமயமொழி அறிவினை வளர்த்துக் கொண்டார் எனலாம். இதனாலும் இயல்பாகவே அமைந்த பயிற்சிப் பண்பினாலும் பிற்காலத்தில் இராமநாதன் ஓர் உள்ளத் துறவியாக, ஞானியாக சமயவாதியாக மாறுவது எளிதாயிற்று. நாவலரளவு சைவத்திரு அமைந்த எளிமையான கோலத்தை மேற்கொள்ளாவிட்டாலும் பிற்காலத்தில் ஒரு தமிழ்க் கனவானாகத் தமது உணவு, உடை, பழக்கவழக்கங்களிலே இராமநாதன் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

இராமநாதனைப் போல நாவலர் பெரும் செல்வக் குடும்பத்திலே தோன்றியவரல்லர். தமிழையும் கற்றுப் பிறமொழியான ஆங்கில அறிவும் பெற்று அவற்றின் உதவியால் ஆராட்சி, மொழி பெயர்ப்பாளர் பதவிகளிலிருந்த நடுத்தரச் செல்வ வசதியுடைய குடும்பப் பின்னணியே நாவலருக்கு வாய்த்திருந்தது. இதனோடு தம் உறவினரின் உதவிகளையும் நாடாது மான உணர்வோடு வாழ்ந்தவர் அவர். விவாகம் செய்து சீதனப் பணத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர் அல்லர். வலியக் கிடைத்த தமிழ்ப் பண்டிதருத்தியோகத்தையும் வேண்டாமென்று உதறித்தள்ளி தாம் கற்ற ஆங்கிலத்தினாலேயே பெறக்கூடிய உத்தியொகத்தையும் தேடாது வாழ்ந்த தியாகியே

நாவலர் அவர்கள். இத்தனையும் அவர் மேற்கொண்ட காரணம் 'சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாக கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையேயாம்' தமது நூல்களின் விற்பனையாலேயே கிடைத்த பணம், இராமநாதனின் மாமனாரான நன்னித்தம்பி முதலியார் போன்ற வள்ளல்கள் வழங்கிய நிதியுதவி, மக்களிடம் பிடியரிசி தண்டிவிற்றுப் பெற்ற பணம் ஆகியவற்றைக் கொண்டு மிகவும் சிரமங்களிடையே 1848 ஆம் ஆண்டு ஐப்பசிமாதம் 28ஆம் தேதியன்று யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணையிலே சைவப்பிரகாச வித்தியாசாலையையும், 1864 ஆம் ஆண்டு ஐப்பசி 28ஆந் தேதியன்று சிதம்பரத்தில் ஒரு வித்தியாலயத்தையும் ஸ்தாபித்தார். சைவப் பிள்ளைகள் சைவச்சூழலிலே சைவத்தையும் தமிழையும் உலகியலுக்குரிய பூகோளம், கணிதம், வானவியல் முதலியவற்றையும் கற்றல் வேண்டும் என்ற வேணவாவே அவரை இப்பணியில் ஈடுபடுத்தியது. " 1871 ஆம் ஆண்டில் வண்ணார் பண்ணையில் யோன் கில்னர் (Rev. John Kilner) என்பவர் நடத்திய வெஸ்பியன் ஆங்கிலபப் பாடசாலையில் சைவ மாணாக்கர் வீபூதி அணிந்து சென்றமைக்காக பாடசாலையிலிரந்து வெளியேற்றப்பட்டனர். நாவலர் அப்பிள்ளைகளின் நன்மை கருதி ஒரு சைவ ஆங்கிலப் பாடசாலையினை வண்ணார் பண்ணையில் 1872ம் ஆண்டு நிறுவினார். போதிய பணம் இல்லாமையாலும் பிள்ளைகள் பலர் வராமையாலும் இவ் ஆங்கிலப்பாடசாலை 4 ஆண்டுகளே நடைபெற்றது. சிதம்பரத்திலே திருவீதியிலே விசாலமான நிலமொன்றை வாங்கி அந்த நிலத்திலே பாடசாலை, பூசைக்கட்டு, சாத்திரக்கட்டு, சமயற்கட்டு, ஆகியன அமைத்து கல்வி அறிவொழுக்கங்கள் கொண்ட வாத்தியார்களை நியமித்து ஆன்மவியல், உலகியல் ரீதியாக இருவகை கற்கைகளைக் கற்பித்து இவற்றோடு திருமறையோதற் பயிற்சியும் அளித்து முறையான சைவப் பிரசாரகர்களை உருவாக்கும் பயிற்சி நிலையமாக அதனை ஆக்கும் எண்ணமும் நாவலருக்கு இருந்தது. இதன் விபரத்தை 1860ஆம் ஆண்டில் அவர் வெளியிட்ட விக்கியாபனத்தில் காணலாம் ஆனால் அவரின் திட்டம் நிறைவேறவில்லை. பின்னர் நாவலர் தனது இறுதிக்காலத்திலே கீரிமலையிலே சிவன்கோவில் ஒன்றை மீண்டும் கட்டுவதற்கான திட்டம் வகுத்து அதுபற்றியும் பொதுமக்களின் பார்வைகென ஒரு துண்டுப்பிரசுரம் எழுதி வெளியிட்டார் " அவர் சிவபதம் அடைந்த சில ஆண்டுக்கு பின்னர் உதயபானு, இலங்கைநேசன் முதலிய செய்தித்தாள்கள் அவர்வழியிற்சென்று பெருத்த விளம்பரங்களினால் சைவசமய மக்கள் விழிப்புற்று இவ் ஆலயப் பணியினை இனிது நிறைவேற்றினர்".

இராமநாதனைப் பொறுத்தவரையிலே பாடசாலை நிறுவல் என்பது கடினமான காரியமாய் இருக்கவில்லை. நாவலரின் வழிச்சென்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சபை 1890 ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை நிறுவியதும் தனிப்பட்ட பெரியோர்கள் ஆங்காங்கே பாடசாலைகளை நிறுவியதும். இராமநாதனது சிந்தனையைத் தூண்டியிருத்தல் வேண்டும். ஆங்கிலக் கல்வியை நாடிக் கொழும்பு வரும் தமிழிளைஞர் ஆங்கில நாகரீகத்திற்கு ஆட்பட்டு அழிவுறலைக்கண்ட அவரின் உள்ளத்திலே யாழ்ப்பாணத்தில் சிறந்ததொரு கல்லூரியை நிறுவவேண்டுமென்ற வேணவா வளர அவ்வெண்ணம் உதவியிருக்கலாம். எனினும் அவர் முதல் நிறுவியது

இராமநாதன் மகளீர் கல்லூரியையே ஏன் எனில் யாழ்ப்பாணத்திலே சிறுவர்களிலும் சிறுமிகளின் நிலையே கொழும்பிலுள்ளதிலும் பயங்கரமாக இருப்பதை அவர் கண்டார். கிறிஸ்தவச்சூழலிலே சைவ மகளீரின் நிலை மோசமாவது கண்டு இராமநாதன் மனம் புளுங்கியதால் அவரால் 1913ஆம் ஆண்டிலே இராமநாதன் மகளீர் கல்லூரி மருதனார்மடத்தில் நிறுவப்பட்டது. 1921ஆம் ஆண்டு ஆண்களுக்காகத் திருநெல்வேலியில் பரமேசுவரக்கல்லூரி நிறுவப்பட்டது. இராமநாதன் இந்துக்கல்லூரி முகாமைச் சபையிலும், நியாயவாதி சு. இராசரத்தினத்தைச் செயலாளராகக் கொண்ட சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திலும் தலைவராய் விளங்கியவரென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

20ம் நூற்றாண்டின் முதற்காலிலே கல்வியைப் பற்றிய எண்ணங்கள் பெரிதும் வளர்ச்சி பெற்றுவிட்டன. நாவலர்காலக் கல்வி நிலைக்கும் 20ம் நூற்றாண்டுக் கல்வி நிலைக்கும் பாரிய வேறுபாடு காணப்பட்டது. சமயத்தை அடிநாதமாகக் கொண்டு சிறந்த சமயியை உருவாக்க வேண்டுமென்று கருதிய நாவலரின் கருத்துப் பழையதாகிவிட்டது. ஒழுக்கமும், உயரறிறும் வாழ்க்கைப் பயன்பாடும் நிறைந்த ஒரு கல்விமுறையினை இராமநாதன் தமது குறிக்கோளாய் கொண்டிருந்தார் என்பதற்கு அவரின் பின்வரும் கூற்றே எடுத்துக்காட்டாகும்

“பரமேசுவராக் கல்லூரி , இந்திய ஞானிகளின் ஞானத்தோடு தமிழ் சங்க இலக்கியச் செல்வங்களும் இணைந்து பிரித்தானியரின் மிகச் சிறந்த கல்விப் பாங்கினை தமிழ்ச் சிறுவர் பெறக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தவென நிறுவப்பட்டது. இக்கல்வியாலே தீயவன் நல்லவனாய் மாறும் நன்மை ஏற்படும். குறும்புகளாலும் வல்லுணர்ச்சியாலும் உந்தப்படுபவன், அவற்றினை அடக்கி நற்பணிகளுக்கு உதவுவோனாவான். மந்தைபோலச்சோம்பி வேலையற்றறு உழல்பவன் அத்தகைய தீமையிலே தோயாதவரை ஊக்கமுடையோனாயும் பிறர்நலம் கருதுவோனாயும் மாறுவான். முரடனாயும் ஆபாசச் செயல்களில் ஈடுபடுவோனாயும் இருப்பவன் சீர்திருத்தப்படுவான். குறுகிய மனப்பான்மையும் வெறுப்புணர்வும் உடையோன் அநுதாபமும் சகிப்பு மனப்பான்மையும் எய்தப்பெறுவான். சிந்தனையின்றி அந்நியரின் நடையுடை பாவனைகளை கேலி செய்யத்தக்க வகையிலே பின்பற்றுவோன் பரம்பரையாய் நிலைபெற்றுவரும் தன் மூதாதையரின் இலட்சியங்களை அவை எவ்வளவு தூரம் எமது தேவைகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் பொருத்தமாய் உள்ளன என்ற அறிவுடன், தான் பிறந்த நாட்டிற்குப் பொருந்தும் நடை, உடை பாவனைகளை மேற்கொள்வான் இத்தகைய செயலுந்தலால் அமையும் எனது இலட்சியங்கள் உலகியலானவையும், ஆன்மீகமானவையுமான மகிழ்ச்சியை நிலைபெறுத்தும் என்ற உணர்வோடு அவன் செயற்படுவான்”.

இராமநாதனின் தந்தையாரான பொன்னம்பல முதலியார் கொழும்பு கொச்சிக்கடையிலே கட்டத் தொடங்கிய பொன்னம்பலவானேச்சரத்தைப் பூர்த்தி பண்ணியதோடு இராமநாதன் கல்லூரியிலே இராமநாதேச்சரத்தையும்

பரமேசுவரக்கல்லூரியிலே பரமேசுவரன் ஆலயத்தையும் கட்டித் தமது கோயிற் பணி ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் இராமநாதன் வெளிப்படுத்தியுள்ளார். நாவலர் தமது சைவப்பிரகாச வித்தியாசாலைகளிலே நாயன்மார்கள் அறுபத்து மூவர்க்கும் கோவில் சமைத்ததும் நினைவிற் கொள்ளத்தக்கதே மிஷநெறிகளின் பாணியிலே தேவாலயத்தோடு பாடசாலைகளை இணைத்து நடத்தும் முறையினை இவ்விருவரும் பின்பற்றினர்.

நாவலரைப்போலச் சமய ஆராட்சியிலும் தாம் அறிந்த உண்மைகளை எழுத்திலும் பேச்சிலும் வெளியிடுவதிலும் இராமநாதன் ஈடுபட்டதுண்டு. ஆனால் கல்விக்கோட்பாட்டிலே நாவலரிலிருந்து வேறுபட்டு விரிவான கல்விமுறையொன்றினை மேற்கொண்டது போலவே சமய விடயத்திலும் இராமநாதன் வேறுபடுவதை நாம் காணலாம். நாவலர் ஒரு சைவ சித்தாந்தி. சிவாகமங்களையும் திருமுறைகள் மெய்கண்ட சாஸ்திரங்களையும் உயிரெனப் போற்றியவர்; அவற்றின் மரபுகளுக்கு எதிரானவற்றைச் சாடுவதிலே முழுமூச்சாக ஈடுபட்டவர். கிறிஸ்தவர் சைவசமயத்தைக் கண்டித்த வேளைகளிலே வெகுண்டெழுந்து சைவத்தின் உண்மையை நிலைநாட்டத் தம் நாவண்மையையும் எழுத்துவண்மையையும் பயன்படுத்தியவர். கிறித்தவத்துக்கு எதிராக அவர் எழுதி வெளியிட்ட **சைவ தூஷணபரிகாரம்** அவர் கிறிஸ்தவத்தின் மீது கொண்ட சீற்றத்தை மட்டுமன்றி கிறிஸ்தவ சமயத்தில் அவர் பெற்றிருந்த அறிவின் அளவினையும் புலப்படுத்துவதாகும். விவிலிய வேதமொழிபெயர்ப்பிலே பார்சிவல் பாதிரியாருக்கு உதவியதாலும் கிறிஸ்தவ சூழலிலே பலஆண்டுகள் வாழ்ந்ததாலும் அதனுள்ளும் புறமும் நாவலருக்கு நன்கு தெரிந்திருந்தது.

இராமநாதன் காலத்திலே கிறிஸ்தவ எதிர்ப்புப் போராட்டம் பெருமளவு வற்றி வடிந்து விட்டது. கிறிஸ்துவ மதமாற்றமும் முன்னளவு தீவிரமாக இருக்கவில்லை. மாறாக கிறிஸ்தவத்தோடு ஒப்புநோக்கும் இயல்பும் ஓரளவு சமய சமரச நோக்கும் ஏற்படத்தொடங்கி விட்டன. இராணி பல்கலைக்கழகத்தில் இலத்தீன் மொழியைக் கற்றதாலும் விவிலிய வேதத்தை வல்லார் வாய்க்கேட்டு அறிந்தமையாலும் ஒழுக்கவியலைக் கற்றதாலும் அதேவேளையில் இல்லத்தில் சைவசமய சாஸ்திர தோத்திரங்களைப் படித்ததாலும் ஆங்கிலமொழி மூலம் பெற்ற பரந்த மனப்பான்மையாலும் இராமநாதன் கிறிஸ்தவம் – சைவமாகியவற்றை ஒப்பீடு செய்து ஆராயும் முயற்சியிலே பிற்காலத்தில் ஈடுபட்டார். இதன் பயனாக 1898ஆம் ஆண்டிலே The Gospel of Jesus according to St Mathew as interpreted to R.L Harrison by the Gospel Experience of Sri Parananda By the Light – of John Yoga – Edited by R.L Harison என்ற நூலும் இராமநாதனால் வெளிப்படுத்தப்பட்டன. இங்கும் Sri Parananda என்பது இராமநாதன் தமக்கு இட்டுக் கொண்ட தீட்சா நாமமாகும்.

1897இல் விவேகானந்தா சுவாமிகள் இலங்கைக்கு வருகை தந்தார். இராமநாதனின் வரலாற்றிலே அவருக்கும் விவேகானந்த சுவாமிகளுக்கும் சந்திப்போ தொடர்போ ஏற்பட்டதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை எனினும் இராமநாதன் தமக்கு வழங்கிய பரானந்தா என்ற நாமமும், ஞானயோகம் என்ற சொற்பிரயோகமும் அவர்

இந்நூல்களிலே கூறும் கருத்துக்களும் இவரின் வேதாந்தச் சார்பினை ஓரளவு புலப்படுத்துகின்றன. 1914 ஆண்டில் பகவத் கீதையை **"பகவத்கீதா"** எனத் தலையங்கமிட்டு அதற்கு மொழிபெயர்ப்பும் விருத்தியுரையையும் இராமநாதன் எழுதியுள்ளார். பெரும்பாலும் வடமொழிப் பதங்களையும் வடமொழிக் கிரந்த எழுத்துக்களையும் கூடக் கையாண்டு இவ் விருத்தியுரை எழுதப்பட்டுள்ளது. இராமநாதன் தியாக சமாதியிலே ஈடுபட்டிருக்கும் காட்சியைக் கொண்ட நிழற்படமும் அவரின் நிலையினை எடுத்துக் காட்டுவதாகும். காலத்தின் மாற்றத்திற்கும் தேவைக்கும் சூழலுக்கும் ஏற்க இராமநாதனின் சமயச் சிந்தனைகள் பக்குவமடைந்தன என்றே கொள்ளவேண்டியிருந்தது. 1906ஆம் ஆண்டிலே இராமநாதன் மைரண்டிபெஸ்ப்ஸ் என்னும் அமெரிக்க ஞாயவாதியும் தமது சீடருமான ஒருவரின் அழைப்பினை ஏற்று அமெரிக்கா சென்று சமயத் தொடர்பான சொற்பொழிவுகளை ஆற்றினார். அவை Culture of the soul Among Western Nation என்ற பெயரில் 1906ஆம் ஆண்டில் முதற்பதிப்பாகவும் அதே ஆண்டுக் கடைசில் இரண்டாம் பதிப்பாகவும் வெளியாகியுள்ளன.

"நம்பிக்கையில் எழுச்சியும் கடவுள் பக்தியில் வைராக்கியமும் குருவைக் கருவியாகக் கொண்டே எழுகின்றன. ஆன்மாவையும் இறைவனையும் உறவுபடுத்தும் உண்மைகள் ஞானானுபவங்களாய் முகிழ்த்தெழல், அவற்றைப் போதிக்கின்ற குருவின் ஆழ்ந்த பேரறிவிலேயே தங்கியுள்ளன".

"அன்பே இறைவன், ஆகவே அன்பில் வாழ்பவன் இறைவனில் வாழ்வோனாவான், இறைவனும் அவனுள் வாழ்கின்றான். (1 யோன் IV 16 மத்தேயு சுவிசேஷத்தின் V-VII அதிகாரங்களிலே) யேசுகிறிஸ்து நாதர் சாந்தி அன்பின் கோட்பாட்டை பல்வேறு உதாரணங்களால் விளக்குகின்றார். இறைத்துவம் அல்லது அவனது சாம்ராட்சியம் (மோட்சம்) ஒழுக்க நிலை நிற்போர்க்கே கிட்டுமல்லாது, அறிவாளரின் விவேகத்தினாலே அதனைப் பெறமுடியாது. இவ்வகையிலே யூத அறிவுவாதிகளிலிலிருந்து (Sexibes) அவர் வேறுபடுகின்றார்.

1915ஆம் ஆண்டிலே கம்பளையிலே சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்குமிடையே கலவரம் மூண்டதையடுத்து 1915 ஆகஸ்ட் 30ம் திகதி அடக்குமுறைச் சட்டம் Martial Law) பிரகடனம் செய்யப்பட்டது. 16 இச் சட்டத்தின் அடிப்படையிலே D.S. சேனநாயக்க, J.R.சேனநாயக்க, சாள்ஸ் பத்துவந்துதேவா (பௌத்த பிரம்மஞானசங்கத் தலைவராக இருந்தவர்) உட்படச் சிங்களத் தலைவர் பலர் ஆங்கில தேசாதிபதியின் கட்டளையின்பேரில் சிறைப்பிடிக்கப்பட்டனர். பலர் துப்பாக்கிச்சூட்டுக்கும் கொலைக்கும் இரையாயினர். சிங்களவருக்கு இழைக்கப்பட்ட அநீதியை எடுத்துரைக்க இராமநாதன் இங்கிலாந்து சென்று இலண்டனிலே ஆங்கிலமேலிடத்தாட்சியாளருக்கு உண்மைகளை எடுத்துவிளம்பிச் சிங்களத் தலைவர்களை விடுதலை செய்வித்தார். அநியாயங்களுக்கு காரணராயிருந்து தேசாதிபதியை மீள அழைக்க வைத்தார். இவற்றினாலே சிங்கள மக்களின் நெஞ்சங்களிலே நிலையான இடத்தைப் பெற்றார்.

பௌத்த ஆலயங்களின் சொத்துரிமைச் சட்டம், முஸ்லிம்களின் திருமண உரிமைச்சட்டம், யாழ்ப்பாணத்திற்கு கொழும்பிலிருந்து புகையிரதப்பாதை சமைக்கும் கோரிக்கை, மலைநாட்டுக் கூலி மக்களின் உரிமைகள், தேவைகளை நிறைற்றேம் சட்டம், முதலாகப் பல சீர்திருத்தங்களுக்கும் ஆளாய் இருந்தவர் இராமநாதனே.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் தமது நாவன்மை காரணமாகத் திருவாவடுதுறை ஆதீனத்தின் உபய சந்நிதானங்களால் நாவலர் எனும் பட்டம் வழங்கப்பெற்று கௌரவிக்கப்பட்டார்.

தமிழிலே நாவலரின் நாவன்மைக்கு நிகராக இராமநாதன் தமிழிலும் ஆங்கிலத்திலும் தலைசிறந்த சொற்பொழிவாளராய் தம் காலத்திலே விளங்கினார் என்பதற்குச் சான்றுகள் பல உள. 'Silver tougued orator of the East' என்று போற்றப்பட்ட அவர் சிறந்த நியாயவாதியாகவும், ஈடுஇணையில்லாத சட்டசபை உறுப்பினராகவும், விளங்கியதிலே வியப்பில்லை. உள்ளத்திலே தோன்றியதை ஒளிவுமறைவின்றி எடுத்துரைப்பதிலும் உண்மை ஒளியோடு தெளிவாக விடயங்களை விபரிப்பதிலும் ஆதாரங்களின் அடிப்படையிலன்றி பேசாமையிலும் நாவலரைப் போலவே இராமநாதனும் சிறந்து விளங்கினார் என்பதை அவரின் சட்டசபை உரைகளிலிருந்து நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

"தனிப்பட்ட நட்பினாலே பொதுப்பணிகள் பாதிக்கப்படுதல் கூடாது. இதுவே என் கருத்தாகும். இந்நாள் எனக்கு மிகவும் சங்கடமான நாள். மனதிற்கு மகிழ்ச்சிதராத செயலொன்றை நான் செய்ய நேர்ந்துள்ளது. ஆனால் என்ன நேர்ந்தாலும் அதனை நான் செய்தேயாகவேண்டும். ஏனெனில் மக்களின் நியாயமான வேண்டுதற்குரலானபிரித்தானிய சிம்மாசனத்திற்கும் உங்களுக்கும் விருப்பமான ஒன்றாகவே இருக்கும். கனம் தங்கிய அங்கத்தவர் எவராவது இச்சபையிலே குற்றஞ்சாட்டப்பட்டால் அவர் எழுந்து "நான் பிழை செய்து விட்டேன். எனக்குப் பதிலாக தகுதிவாய்ந்தவர் அறிவுரைகளைக் கூறட்டும், எவ்விதம் இந்தக் கடமைகள் ஆற்றப்பட்டிருக்கவேண்டுமோ அவ்வாறு ஆற்ற நான் தவறிவிட்டேன்" என்று கூறுதல் வேண்டும்.

நாவலர் வசனநடை கைவந்த வல்லாளர், மாணவர், பொதுமக்கள், அறிஞர் ஆகிய முத்தரத்தாருக்கும் உகந்த வகையிலே வெவ்வேறு வகை வசனநடையைக் கையாண்டு பல நூல்களை எழுதியவர். அவை இன்னும் தமிழ்மொழியின் கலங்கரை விளக்குங்களாய் உள்ளன.இராமநாதன் ஆங்கிலத்தில்மட்டுமன்றிதமிழிலும் சில நூல்களை எழுதியுள்ளார். பகவத்கீதைக்கு விருத்தியுரை,பதினெட்டு திருக்குறட்பாயிரஇராமநாத பாஷ்யம், ஔவை நாயகியின் ஆத்திசூடி மந்திர விளக்கம், செந்தமிழிலக்கணம் ஆகியன அவர் எழுதிய நூல்கள். நாவலரின் வசனநடையின் பொலிவு, அழகு, தனித்தன்மை தெளிவு என்பன இராமநாதனின் வசனநடையிலே இல்லையென்பது அவற்றைப் படிப்பவர்க்கு எளிதில் புலனாகும். ஆனால் ஒரு

ஒழுங்குமுறையினையும் கம்பீரத்தையும் மாணவநிலையில் விடயங்களை அணுகும் போக்கும் அவரின் நூல்களிலும் உரைநடையிலும் காணக்கிடக்கின்றன. ஓர் எடுத்துக்காட்டு பின்வருமாறு —

"நான் கொலை செய்யவில்லை, நான் களவு செய்யவில்லை, நான் கள்ளுண்ணவில்லை. நான் பொய் சொல்லவில்லை என்று கூறுகின்றவன் கடையிலுள்ள மாமிசத்தை வாங்குவித்துப் புசித்துக்கொண்டும், ஒருவன் மேல் குற்றம் சுமத்தி, அவனுடைய கீர்த்தியைப் பங்கம் பண்ணிக்கொண்டும், அறிவை மயக்கும் 'உவையினை'யும் புகையிலையையும் அடிக்கடி உபயோகித்துக் கொண்டும், தன் சித்தத்திலுள்ளதை மறைக்கும் பொருட்டுத் தந்திரமான சொற்களால் வேறோர் அர்த்தமாகும்படி பேசிக்கொண்டும் ஒழுகுவானாயின், அவன் அழகுள்ள வாழ்வாகிய பேரறிவையும் பேரன்பையும் அடையமாட்டான்".

நாவலர் தமது தமிழ்ப்புலமையை சைவவளர்ச்சிக்குக் கருவியாகப் பயன்படுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார். வடமொழியும் தமிழ்மொழியும் சமமானவை. இறைவனால் ஆக்கப்பட்டவையென்பது அவர் கருத்து. சமயப்பற்றில் அவர் கொண்டிருந்த அளவு மொழிப்பற்று அவருக்கு இருக்கவில்லையென்றே கூறல் வேண்டும். தமது நான்காம் பாலபாடத்திலே தமிழ், தமிழ்ப்புலமை என்ற இரு பாடங்களை மிகவும் அமைதியாக உணர்ச்சிக்கலப்பு அதிகமின்றி அவர் எழுதியிருத்தல் காணலாம். தமிழ்ச்சைவன் ஒவ்வொருவனும் ஒழுக்கநெறியையும் சைவநெறியையும் போற்றவேண்டும் என்று அவர் வற்புறுத்தினாரே அன்றி தமிழன் தமிழையே பேசவேண்டும் தமிழ்ப்பண்பாடுகளையே வாழ்விற் கடைப்பிடிக்கவேண்டும் என்றாவது, இலங்கையன் என்ற உணர்வோடு வாழவேண்டுமென்றாவது அவர் அடித்துக் கூறியதில்லை. ஆனால் இராமநாதனோ தமிழர் மட்டும் கலாசாரத்தினைப் பேணித் தமது சொந்த மொழியிலே வீட்டிலும் வெளியிலும் பேசவேண்டுமென்று கூறுவதோடு நில்லாது சிங்களவரும் தமது மொழி கலாசாரங்களைப் பேணவேண்டும் என்று வற்புறுத்தினார். தமது காலத்தில் மேற்றிசை நாகரிகமும் பயிற்சிப் பண்புகளும் இலங்கையரைப் படிப்படியாக ஆட்கொண்டு வருவதை இராமநாதன் மனவேதனையோடு அவதானித்த காரணத்தினாலேயே இந்நாட்டவரின் சொந்தமொழி கலாசாரங்களை அவர்கள் பேணல்வேண்டும் என்று அறிவுறுத்தினார். அயல்நாடாகிய இந்தியாவில் நிகழ்ந்துவந்த சுதந்திரக் கிளர்ச்சிகளும் தேசிய உணர்வும் இராமநாதனையும் பாதித்திருத்தல் வேண்டும். 1904ம் ஆண்டு செப்ரெம்பர் 3ம் நாளில் அவர் ஆனந்தாக் கல்லூரியில் ஆற்றிய சொற்பொழிவு அவரின் தேசிய மொழி உணர்வுகளுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

"சிங்களமொழிக் கல்வியையும் உங்கள் முழுமையான ஆற்றலையும் பயன் செய்து வளர்த்தல் வேண்டும். ஆங்கிலம் தேவைப்படாத இடங்களில் எல்லாம் அதனைத் தவிர்த்து சிங்களத்தையே பேசவேண்டும். இப்படிச் செய்வீர்களாயின் நீங்கள் உங்கள் தாய்நாட்டுக்கு உண்மைப்பணியாற்றுவதாய் நான் கூறுவேன். அவ்வாறு செய்யாது

உள்ளும் புறமும் மேற்கு நாகரிகத்தையே பூண்டவர்களாய், உங்கள் மொழியினைப் பொது மேடைகளிலும் இல்லங்களிலும் பேசக்கூசுபவர்களாய், உங்கள் தேசிய நிறுவனங்களைப் பாதுகாக்க முன்வராதவர்களாய் இருப்பீர்களாயின் உங்களில் ஒருவர்கூடச் சிங்களவர் என்று கூறத் தகுதியற்றவர்களாகிவிடுவீர்கள்".

நாவலர் காலத்திலேயே பத்திரிகை பொதுசனத்தொடர்பு சாதனமாக நிலவத்தொடங்கிவிட்டது. நாவலர் மாணவராய் வெஸ்லியன் மிஷன் பாடசாலையிலே கல்வி கற்கும்பொழுதே அக்காலத்தில் வெளியான உதயதாரகையிலே எழுதத் தொடங்கிவிட்டார். பிற்காலத்தில் இலங்கைநேசன் பத்திரிகையிலும் அவர் எழுதியதுண்டு. சைவரின் நலம் பேண ஒரு பத்திரிகை வெளியாவதை அவர் விரும்பினார். அவரின் மறைவைத் தொடர்ந்து சிறிது காலத்திலே சைவஉதயபானு என்ற பத்திரிகை தோன்றியது. சைவபரிபாலன சபை 1889இல் இருந்து இந்துசாதனத்தை வெளியிட்டுவருகிறது.

இராமநாதனும் பத்திரிகையின் தேவையை நன்குணர்ந்திருந்தார். "எங்களுக்குப் பல தேவைகள் உள்ளன. எவரினதும் கைக்கூலியாகத் தன்னைத் தாழ்த்திக் கொள்ளாத பத்திரிகையே இந்நாட்டின் முதலாவது பெருந்தேவையாகும். தமிழர்க்கென்று ஒரு பத்திரிகை வேண்டாமா? தவறான பிரதிநிதித்துவத்தினை எதிர்த்துப் போராட அது ஓர் அவசியத் தேவையன்றோ? பல நாள்களாய், வாரங்களாய், மாதங்களாய், ஆண்டுகளாய் நாம் பிழைவழிச்செல்லும் பத்திரிகைகளின் கொடுங்கைகளில் அகப்பட்டு வருந்துகிறோம்" என்று ஒரு தடைவ அவர் குறிப்பிட்டார். இந்தக் குறைகளைப் போக்க அவர் பலரைக் கூட்டுச்சேர்த்து 'Ceylonese' என்ற ஆங்கிலப் பத்திகையைப் பங்கு அடிப்படையில் நடத்தினார். ஆனால் பங்காளிகளின் மிதமிஞ்சிய தலையீட்டினால் பத்திரிகை இடைநின்று போயிற்று. இராமநாதன் தமது வாழ்க்கையிலே கூட்டுச்சேர்ந்து முயன்று தோற்ற முயற்சி இது ஒன்றுதான்.

இராமநாதனின் சட்டசபை நுழைவையடுத்து நாவலரின் வாழ்வு நிறைவுற்றது. இலங்கையிலே டொனமூர் ஆணைக்குழுவின் பரிந்துரையையடுத்து சர்வசன வாக்குரிமை பெற்ற மக்கள் அரசாங்க சபைக்குத் தம் பிரதிநிதிகளைத் தெரியத்தொடங்கியபொழுது இராமநாதனின் வாழ்க்கை இனிதுற்றது. (1930) இவை தற்செயல் நிகழ்ச்சிகளா? அல்லது இவ்விரு பெரியார்களதும் தேவை அவ்வக்காலத்தோடு முடிவடைந்து விட்டதன் அறிகுறியா என்பது சுவைநிறைந்ததோர் ஆராய்ச்சியாகும். அதற்கு இது இடமன்று.

*நன்றி : நாவலர் நூற்றாண்டு மலர் (1979)*




**நாவலர் பெருமானின் சிறப்பைக் கௌரவித்தும் சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் 150வது ஆண்டு நிறைவுகுறித்தும் இந்திய அரசால் வெளியிடப்பட்ட சிறப்பு முத்திரை**

### நாவலரைப் போற்றி
### திருவாவடுதுறை ஆதீன
### மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்

கந்தவே டவத்திற் கருதரன் பான்முன்
வந்தவே ளென்ன வந்தவ தரித்தோ
னீற்றொடு கண்மணி நிறையப் பூண்பார்ப்
போற்றோடு பொலியும் புண்ணிய புருட
னவநெறி யாய வலைத்துங் களைந்து
சிவநெறி வளர்க்குந் திப்பிய குணத்த
னெழுத்து முதலாக வியம்பிலக் கணமும்
வழுத்திலக் கியமும் வரம்புகள் டெழுந்தோன்
சமயம் விசேடந் தகுநிரு வாணமென்
றமையுத் தீக்கையு மடைவுறப் பெற்றோர்
சுமங்கல விசேடச் சுருதியா மூலா
கமங்களின் முப்பொருள் கருதுபே ரருளான்
யுத்தியி னமைத்துணர்ந் தோங்க னுபூதி
சித்தியுற் றமைந்த சிவசிந் தாமணி
கற்றுணர் புலவருட் களிக்கு
முற்றுண ராறு முகநா வலனே.



சைவநெறியும் தமிழ்நெறியும் தழைத்தோங்கத் தொண்டாற்றிய
சேர். பொன். இராமநாதன் அவர்களின் நினைவுநாளை நினைவுகூருவோம்.

Print Master. T.P. 021-205 3322